751

KALANILAYAM

தனிப்பிரதி விலை 0-2-6 அணா

கலா நிலயம்.

V8. No. ௨௦, 16.5.1935

௬௨
m211, N28KN
N35.8.20.
199218

751

KALANILAYAM

தனிப்பிரதி விலை 0-2-6 அணா

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

-8 NOV 1935 MADRAS

Vol. 8] 1935 ௵ மே ௴ 16 ௳ [No. 20

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 305
2. ஒத்தெல்லோ (அங்கம் 2. களம் 3.) Shakespeare's "Othello" 307
3. கம்பராமாயணம் (கிட்கிந்தைப் படலம்) T. N. சேஷாசலம் B.A., B. L., 310
4. சூரியன் (சூரியகுடும்பம்—சனி) E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A.,L.T., 312
5. வில்லிபாரதம் (துச்சாதனன்) K. T. விஜயராகவாச்சாரியார் B. A. 314
6. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 7-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 815
7. நரவாகன தத்த சரிதம் S. சோமசுந்திர தேசிகர் 317
8. நாமகள் தசாங்கம் நவாலி, க. சோமசுந்தரப் புலவர் 319
9. வர்த்தமானம் 320

## கலாநிலயம்

### வெறும் வாய் மெல்லல்.

புத்தகப்படிப்பினால் பெறவல்ல பயன் பெரிது இல்லையென்று இகழ்ந்தும், உலக நடமாட்டத்தினிடையே வாழ்கின்ற வாழ்க்கைதான் உண்மையான பாடசாலையாகுமென்று புகழ்ந்தும் பேசிச் சிலர்தாம் பேரறிவுடையார்போலத் தம்மைத் தெரிவித்துக்கொள்ள முயல்வது வழக்கம். 'புத்தகப்புழுக்கள்' என்று கல்வியிற்றோய்ந்த கருத்தினரை எள்ளி நகைக்குமிவ்வுலகப்புலிகளின் தன்மையை ஆராயுங்கால் இன்னவர்களுக்குப் புத்தகமேனும் உலகமேனும் இரண்டுமே என்னவென்று தெரியாதிருக்கின்றதெனும்உண்மை வெளிப்படும். தாம் பயின்றுதளர்ந்துபோன சில அவலச் செய்திகளை உலகஅனுபவங்களென்று கொண்டாடி, தாம் படிக்கப்பயிலாத புத்தகங்களின் அருமையையும் பயனையும் சிறுமையுறப்பேசுவோர் தமக்கும் தம்மளவே அறிவுடைய ஏனையோர்க்கும் எவ்வளவு தீங்கு விளைவிக்கின்றனர் என்பதை யெண்ணி மதிக்கவல்லவர் இங்நிலைகண்டு மிகவும் வருந்துவார்.

வாழ்க்கையே மிகப் பெரிய பாடசாலையாம் என்னுமிந்தப் பேச்சு அந்தத்தில் யாதாக முடிகின்றது என்பதைச் சற்று ஊன்றி நோக்குவோம். நாம்நம்முடைய வாழ்க்கையை நடத்தி விவகரிக்குங்கால் ஒன்றன்பின் ஒன்றாகப் பற்பல பாடங்களைக் கற்றுக்கொள்கிறோம் என்பதை மறுப்பதற்கியலாது. ஒன்றினால் நமக்குக் கைம்மேல் கிடைக்கின்ற இலாபத்தினாலும், அதனினும் அதிகமாகத் தலைமேல் விழுகின்ற [illegible]யினாலும், அப்பாடங்கள் நம்முடைய நினைவினுள்ளே பொறிக்கப் பெறுகின்றன. இந்த இலாப நஷ்டங்களின் நினைவுகளைக்கொண்டு நமது மற்றைய நடமாட்டங்களைத் திருத்திக்கொள்ள முயல்கின்றோம். ஆனாலோ, அந்த இலாபங்கள் உண்மையாகவே இலாபங்கள்தானா, அல்லது, அந்த நஷ்டங்கள் உண்மையாகவே நஷ்டங்கள்தானா என்பதைச் சிந்தித்து ஆராயவேண்டும் என்னும் எண்ணங்கூட எழுவதில்லையே. ஓரோவழி எழுந்தாலுமச் சிந்தனைக்கு உதவிசெய்யவல்ல சாதனங்களை நம்மனத்தில் சேகரித்து வைத்திருந்தால்அல்லவோ அம்முயற்சி பயன்படும். வெறும் வாயை மெல்லுவதைக் காட்டிலும், வெறும் மனத்தால் சிந்திக்கப்புகுவது பரிகசத்திற்குரியதோர் செய்தியாம். ஏனெனில், சிந்தனைக்கு ஆதாரமாயிருக்கக்கூடியது அறிவு: இவ்வறிவும் திருவள்ளுவர் பிழைபடாவகை வழங்கியுளவண்ணம், கற்ற கல்வியின் அளவேயாம். எனின், கல்வியில் தோய்ந்திலா மனத்தினுள்ளே அறிவு என்பது ஒன்று இருக்கின்றதென்பதனினும் அவலச்சொல் வேறு இல்லை. பின், உலக அனுபவத்தினின்று படிக்கின்றவைகளெல்லாம் அறிவில்லாப் பாடங்களாகவே முடிகின்றன. நம்முடைய வெற்றிகளுந் தோல்விகளும், அவ்வவைகளின் உண்மைத்தன்மைதெரியாதவரையில் நமக்கு எவ்வகைப் பாடத்தையுங் கற்பிப்பதில்லை. மற்று, நம்முடைய விவகாரங்களில் 'சாக்கிரதை'யாக இருக்கவேண்டும்

என்னும் ஒரு பயங்கொள்ளிச் சாமர்த்தியத்தை ஒருகால் அவை சொல்லித்தரலாம். அல்லது, வாழ்க்கையாம் இந் நற்பெருங் கலையை ஒரு புன்தொழிற் போராக மாற்றுவதற்கு வேண்டிய உபாயங்களையும் தந்திரங்களையும் போதிக்கலாம். இன்னவகைப் புன்மைகளைத்தாம் நாம் அனுபவம் என்றும் அறிவு என்றும் பெயரிட்டு அலங்கரித்து ஆராதிக்கத் தலைப்படுகின்றோம். சிந்தனையின் உதவி இல்லாவிடத்து இவ்வறிவும் அனுபவமும், அப்பெயரளவே நிற்பதன்றி வேறு எவ்வகை நன்மைக்கும் ஆதாரமாவதில்லை. சிந்தனைக்காதாரமாகிய கல்விமுதிர்ந்தவர் நேர்முகமான அனுபவமின்றியே அனைத்தையும், அதன்மேலும், அறிந்துகொள்ள வல்லவராயிருப்பார். அவ் வறிவினுற்றான் நன்மையுளது. நெருப்பிற் கைவைத்த வொருவன் இது சுடும் என்ற பாடத்தைக் கற்றுக்கொண்டவனாகலாம். அதனால் விளைவது என் ? அடுத்த வீட்டைச் சுட்டெரித்தல் ஆகாது என்னும் அறிவையும் பெற்றவனாவானோ ? அல்லது அயலான் வீடு எரியும் போது, தன்கை சுட்டாலும் அவன் பொருள்களைத் தீயினின்று காக்கவேண்டுமென்று விரையப்போகின்றானோ. மெய்ந்நினைவும் நல்லறிவும் விளைக்கவல்ல சிந்தனைகளுக்கு ஆதாரமாகிய நூல்களைக் கற்றறியாதவொருவன், நெருப்பைச் சுடுவதற்கே பயன்படுத்திக் கொள்வான். எனின், முதன்முறை சுட்ட தீயானது இவனை அனுபவசாலியாக்கியதுடன் நின்றிடாமல் முற்றிலுமே எரித்துவிட்டிருக்குமானால் எத்துணையோ நலமாயிருந்திருக்கும். மற்று, புத்தகமே புகலாகக்கிடந்த ஒருவனுக்கு, நெருப்புச் சுடும்என்ற அனுபவமே நேர்ந்திராமலிருக்கலாம். அதனால் இவன், தீயினுட்பட்ட அயலான் குழந்தையைப் பயமின்றிப் புக்கெடுத்துக் காத்தவனுமாவான். முன்னவனுக்கு அனுபவ அறிவு இருந்தது, அதனின்று விளைந்த நன்மை யாதுமில்லை; பின்னவனுக்கு அனுபவமின்றி அறிவு இருந்தது; இதுவே நலமாகவல்லது. சிந்தனைத்திறத்தைச் சார்ந்தல்லது சிறப்புடையதொன்றும் தோன்றாது. உலக அனுபவம் என்பது நம்மை வளர்த்து ஊனமிடவைக்கும். சிந்தனையோ புத்தர்பெருமான் போன்றவரைப் பிறப்பித்து உபதேசங்கள் செய்யும்.

புத்தக வித்தகர்களுக்கு மாறாக அனுபவசாலிகள் ஒருபுறம் அறைகூவுகின்றார்கள் என்றால், மறுபுறம், காரியநிபுணர்களென்று தம்மை மதித்து மகிழ்ந்து கொள்கின்றவர் அந்தப் புத்தகவித்தகர்களைக் கண்டு இரங்கிப் புன்னகை புரிவதுண்டு. காரியம் என்றால், கட்டை பிளப்பதுமுதல் கழுத்தை அறுப்பதுவரையில் எல்லாங் காரியந்தான்: ஜில்லாபோர்டு அங்கத்தினர்முதல் சர்வாதிகாரிகள் வரையில் தன்னை ஆக்கிக் கொள்கின்றவைகள் எல்லாம் காரியந்தான். தாம் சாதித்துச்செய்த காரியங்களால் யாருக்கு என்னபயனுயிற்று என்பதைச் சிந்தித்தறியச் சக்தியும் பயிற்சியும் இல்லாதபோது அவை அழிவிற்கேயன்றி ஆக்கத்திற்கோ ஆதாரம் ஆவதற்கில்லை. ஆப்பினை அசைத்து அசைத்துப் பிடுங்கிவிட்டது முன் ஒருகுரங்கு. பிரிந்திருந்த மரத்தைச் சேர்த்து ஒற்றுமை உண்டாக்கிவிட்டது அக்குரங்கு என்று பாராட்டுவதுபோலாம் இக்காலம் காரியவாதிகள் முடித்துவைக்கின்ற பல காரியங்கள். சிறியவர்களே இத்தகைய காரியங்களைச் செய்ய முயல்வார், அதனினும் சிறியவர்களே அவைகளை முடிக்கவும் முடிப்பார். மற்று, ஒன்றும் செய்யாதார்போலத் தோன்றுகிற தோற்றத்தினிடையே, செயற்கரிய செய்பவர் சிந்தனையாளர்தாம் என்பதை உலகசரித்திரங்கள் ஓயாமல் பறைசாற்றிநிற்கின்றன. மெய்வருத்தம் பாராமல் பசியும் நோக்காமல் கண்துஞ்சாமல் மேற்கொண்டு முயன்ற கருமங்கள் சில இருக்கலாம். அன்னவர் பெரியவர்களே; ஆயினும் அன்ன கருமங்கள்தாம் சிந்தனையின் சோதனைகளாயிருக்குமேயன்றி வீணைய தடுமாற்றங்களாக இருக்கமாட்டா. சிந்தனையின் திறமின்றியே சாதிப்பதற்கு என்ன கருமங்களுள. கல்வியின்றி அறிவில்லை, அறிவின்றிச் சிந்தனையில்லை, ஆதலின் கல்வியின் முதிர்ச்சியின்றிக் கருமம் ஒன்று கைக்கொள்ளப் புகுவதன் பரிபவம் மிகப் பெரியது. கல்வியின் உதவியின்றிச் சிந்திப்பது வெறும்வாயை மெல்வதற்கு நிராகுமென்னின், கல்வி யில்லாதான் கருமங்கள் செய்ய முயல்வதெல்லாம் வெறுங்கை முழம்போடுவதையே நிகர்க்குமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ !

ஆயினும், சிந்தனைக்கு அனுகூலமான அனுபவங்களும், சிந்தனையினின்று பிறந்து நிகழ்கின்ற கருமங்களும் இவ்வுலகின் கண் முற்றிலும் இல்லையென்று சொல்வதற்கு ஒருவரும் உரியவரல்லர். அவ்வகை அனுபவங்களும் கருமங்களும் சில இருக்க இயலும் என்பதை மறத்தலாகாது. ஆயினும், இன்று நடைபெறுகின்ற நாள்முறை வாழ்க்கையில், நூறுகோடி மக்கள் ஓயாமல் உழன்றுவருகின்ற மகத்தான முயற்சிகளில் எதுவும், உலகத்தின் பொது உடைமையாம் சிந்தனையின் மூலதனத்தைச் சிறிதேனும் பெருக்குவதற்குப் பயன்படவில்லை என்பதைமறுக்கவும் இயலாது. வாய்க்கின்ற அனுபவங்களும், நடைபெறுகின்ற கருமங்களும், நிறைவேற்ற வேண்டிய அவசியங்களும், மனிதருக்குச் சிறிது இயற்கையாயிருக்கின்ற சிந்தனைத் திறத்தையும் தேய்த்துச் சிதைக்கும் எந்திரங்களாகவே சூழ்கின்றன. "உலக அனுபவங்கள், சேர்ப்பதைக் காட்டிலும் குறைக்கின்ற பாகமே அதிகம்; முதியோரிலும் இளைஞர்களே சிந்தனைகளுக்கு நெருங்கி நிற்கின்றவராகின்றார்" என்று மெய்யுணர்வின் மேன்மைவாய்ந்த கிரேக்க வித்தகர் பளேட்டோவே பகர்ந்திருக்கின்றார் என்றால் வேறு என்னவேண்டும். அனுபமில்லா இளைஞர்களிடையே சீலமுடையோர் பலரிலராகார்; வயதுமுதிர்ந்தவரிடையே அன்னவர் அரிதின் அமைந்த புறநடைகளே. சிந்தனை சக்திக்கு உதவியாகவல்லவைகளுடன் பயிலாமல் உலகஅனுபவங்களிலும் விவகாரங்களிலும் பழகுதல் மானுடமுழுமைக்கு ஓர் மறலியைத் தேடிக்கொள்வதாம். முழுமையைக் காப்பதே மானுட தர்மம்; அது சிந்தனையினாற்றான் காக்கப்பெறும்; சிந்தனையை உணவளித்து வளர்ப்பன சீரிய புத்தகங்கள். அவைகளைக் கை[illegible]யின்றால் வேறு முயற்சி

199218



வேண்டியது ஒன்றுமில்லை. "ஆம், நேரமில்லையே, என் செய்வது" என்றவொரு பொல்லாத பேயெண்ணம் நம்மனத்தினுள் புகும்வழி பார்க்குமானால் அப்பொழுதுதான் நமது அறிவு ஆற்றல் மனிதன் என்ற பெயரிற்குள்ள உரிமை அனைத்தும் தனித்தனி சோதிக்கப் பெறுகின்றன. அத்தகைய சோதனையில் நம்மைக் காத்துக்கொள்வதற்கு, எர்னஸ்ட் டிம்னெட் (Ernest Dimnet) என்னுமோர் ஆசிரியர் எழுதியுள்ள வாசகங்களின் நினைவு சாலவும் துணைசெய்யலாம். அப்பகுதியை இதன்கீழ் தருகின்றோம்.

Is there no time you can reclaim, not from your work, not from your exercise, not from your family or friends, but from pleasure that really does not give you much pleasure, from empty talk at the club, from inferior plays (from newspapers) from doubtfully enjoyable week ends or not very profitable trips?

Have you learned how not to give in to idleness? Can you steel yourself against the temptation to give pleasure to people whose laziness needs no assistance. Do you discriminate between kindness and weakness, never refusing to do a good turn, but always refusing to be a dupe? Are you an absolute slave to the telephone?

Do you know how to gather up fragments of time lest they perish? Do you realise the value of minutes? One of the Lamoighons had a wife who always kept him waiting a few minutes before dinner which in those days was in broad daylight, at three o'clock. After a time it occured to him that eight or ten lines could be written during this interval, and he had paper and ink laid in a convenient place on purpose. In time—for years are short but minutes are long—several volumes of spiritual meditations were the result. Mankind might be divided between the multitude who hate to be kept waiting because they get bored and the happy few who rather like it because it gives them time for thought. The latter lead the rest, of course.

What do you do in trains, cars or taxis? If you do nothing in perfect contentment, well and good, but If you feel restless you are to be blamed. Trollope who travelled much wrote many a chapter in the train. You might read those: they are worth your while, and Trollope is in fashion. You cannot be reading or thinking without avoiding company: people will no doubt remark that Vere de Vere keeps very much to himself, but it cannot be helped. If you try to think, you must expect to be a little apart and not a little above.

Do you carry a little book, a great little book of the approved 'Five feet of books' description, or, oh! joy! one of your own finding, in your breast pocket?—'It isn't done'—Oh! I beg your pardon, I meant a pack of cards, of course. Excuse my absent mindedness.

What time do you get up? Could it not be three-quarters of an hour, or half-an-hour earlier? If you give up reading in bed—a practice condemned by all occulists and by not a few moralists—you can manage it. Nobody has ever been able to explain why a Latin education should give that curious superiority to people, but it does. There is the same mystery about saving the morning—'clean up the morning trench' Fenelon wrote to a lady—for intellectual work. Somehow it does the trick. An hour in the morning is worth two, and the nothingness that must inevitably come in the silly hours afterwards will not submerge you.

# ஒத்தெல்லோ

**["Shakespeare's —"Othello"]**

அங்கம் 2. களம் ௩.

[293-வது பக்கத் தொடர்ச்சி]

[காஸ்ஸியோ திரும்பிவருகின்றான். அவனுடன் மான்டானோவும், பிரபுக்களும், ஒயின் எடுத்துக் கொண்டு ஏவலாளனும், வருகின்றனர்.]

காஸ்ஸியோ:—கடவுளுக்குமுன், இதற்குள்ளேயே என்னை நிறையக் குடிக்கவைத்துவிட்டார்களே. 1

மான்டானோ:—நிச்சயமாக, மிகச்சிறியதே; போர்வீரன் நானாக, ஒரு பைன்டிற்குமேற் போகவில்லை. 2

இயாகோ:—கொஞ்சம் ஒயின், ஹோ! 3

(பாடுகின்றான்)

குடுவை குடுவை குடுவையுடன்
குடுகு டுகுடு வென்பேனே

மான்டானோ - ஒத்தொல்லோ வருவதன்முன் ஸைப்ரஸ் தீவிற்குக் கவர்னராக இருந்தவன்.

(1) இயாகோ செய்த சூழ்ச்சியின்படியே காஸ்ஸியோ குடிவெறியுடன் திரும்பிவரும்போது, தன்னை அவர்கள் அதிகம் குடிக்கும்படி செய்துவிட்டார்களென்று சொல்கிறான். கடவுளுக்குமுன் - கடவுள் சாக்ஷியாக.

(2) காஸ்ஸியோ கூறியதை மறுத்து, மிகக் குறைந்த அளவே அவன் குடித்திருக்கின்றான் என்று, மான்டானோ கூறுகின்றான். பைன்ட் என்பது ஆங்கில அளவை, பன்னிரண்டு அவுன்ஸ் கொண்டது. போர்வீரன் நானாக- என்பது 'நான்போர்வீரனாகையால், இதனை உறுதியாகக் கூறுகின்றேன்'—என்று பொருள்படும்.

(3) கொஞ்சம் ஒயின் கொண்டுவாருங்கள்-என்று ஏவலாளர்களைக் கூப்பிடுகின்றான்.

(4) குடுவை - கள்குடிக்கும் பாத்திரம். தோழர்கள் ஒருங்குகூடிக் குடிக்கும்போது, ஒருவர் குடுவையால் ஒருவர் குடுவையை மெல்லத் தொட்டுப் பிறகு குடிப்பது வழக்கம். அவ்வாறு தொட்டுத் தட்டும்போது உண்டாகின்ற

அடுபோர் வீர னோரானே
ஆயுள் எல்லா மொருசாணே
விடுபின் விடுபின் மற்றவெல்லாம்
வீர னென் பேயன் குடிக்கட்டும்
அடடீ அடடீ யுள்ளே போய்க்
கொணர்வாய் கொஞ்சம் மதுதானே. [4]
(ஒயின் கொண்டுவருகின்றனர்.)

காஸ்:—கடவுளுக்குமுன், மிகச்சிறந்த பாட்டு.

இயா:—நான் இதனை இங்கிலாந்தில் கற்றுக்கொண்டேன்; அங்கே அவர்கள் மட்டில் மட்டில்லாதவர் [5]. உன் டேன், உன் ஜர்மன், உன் தொங்குந் தொந்தி ஹால்லெண்டர்,—குடியுங்கள், ஹோ! உன் ஆங்கிலேயனுக்கு ஒன்றுமே யில்லை [6].

காஸ்:— குடிப்பதில் அத்தனை தேர்ந்தவனா, உன் ஆங்கிலேயன்?

இயா:—ஏன், இலகுவிலே அவன் உன் டேனைச் சாகக் குடித்துவிடுகின்றான்; உன் ஜர்மனை வீழ்த்துதற்கு அவன்வியர்ப்பதில்லை; அடுத்த வட்டிலை நிறைப்பதற்குமுன் உன் ஹால்லெண்டரை ஒக்காளித்துவிடுகின்றான் [7].

காஸ்:—நம் தலைவனின் சுகத்திற்காக! [8]

மான்:—அடுத்த அதிகாரியே, அதற்கு உடன்படுகின்றேன் நான், நீ குறைகூறுமளவுஞ் செய்வேன் [9].

இயா:—ஓ, இனிய இங்கிலாந்தே!

(பாடுகின்றான்)

மன்னன் ஸ்டீபன் தகவுடை நன்மகன்
அன்னவ னங்கி யரைப்பண விலைத்தாம்
அதுவுமே யறுகா சதிவிலை யென்றே
தையற் காரனைப் பொய்ய னென்பான்
புகழ்மிகக் கொண்ட புருடன் அவனே
இகழ்தரு பிறப்பு நீயோ வாவாய்
செருக்கால் வீழ்வது நாடு
சுருட்டிக் கொள்ளுன் பழம்போர் வையையே

கொஞ்சம் ஒயின், ஹோ!

காஸ்:—என்ன, இது அதனினும் சிறந்த பாட்டாக இருக்கின்றது.

இயா:—மீண்டுங் கேட்கின்றாயா அதனை?

காஸ்:—வேண்டா; இவைகளைச் செய்பவன் தன் ஸ்தானத்திற்குத் தகுதியற்றவன்என்று நான் கொள்கின்றேன்—நல்லது, எல்லாவற்றிற்கும் மேலே கடவுள் இருக்கின்றார். உய்விக்க வேண்டிய ஆன்மாக்களும் இருக்கின்றன, உய்விக்கப்படாத ஆன்மாக்களுமிருக்கின்றன [11].

இயா:—நல்ல வென் அடுத்த அதிகாரியே, அது உண்மை.

காஸ்:—என் வரையில்,—தலைவனுக்கேனும், மேன்மகன் வேறு யாருக்கேனும் கோபம் வேண்டா-உய்வேன் என்று நம்புகின்றேன் நான் [12].

இயா:—நானும் அப்படித்தான், அடுத்த அதிகாரியே.

வொலியைக் குறித்து. "குடு குடு குடுவென்பேனே" என்கின்றான். அடுபோர் வீரன் நூர் ஆனே - கொல்கின்ற போர்செய்கின்ற வீரன் ஆண்மகனாதலால், அவன் கூசாமல் கொள்ளுமட்டும் குடிக்கவேண்டும் - என்பது பொருள். ஆயுள் எல்லாம் ஒரு சாணே - மனிதன் வாழ்நாள் சாண்போல மிகச்சிறு காலமேயாதலால், நாளை நமன் நாள் என்பது கருதி, இன்றைக்கே குடிக்கக்கூடியவரையில் குடித்துவிடவேண்டும் - என்பதுபொருள்.

விடுபின்...குடிக்கட்டும் - ஆயுளெல்லாம் ஒருசாணேயாகையால், மற்ற எண்ணங்களை யெல்லாம் விட்டுவிட்டு வீரனானவன் குடிப்பதிலேயே தன் கவனத்தைச் செலுத்தட்டும் - என்பது பொருள்.

அட டீ...கொணர்வாய்—என்று அங்கிருந்த ஏவலாளனுக்குக் கட்டளையிடுகின்றான்.

(5) மட்டு - என்னுஞ்சொல் இங்கு, அதற்கு இருக்கின்ற, மது அளவு, என்னும் இரண்டு பொருள்களிலும் வந்திருக்கிறது. மட்டில் - கள்ளில் (கள்குடிப்பதில்), மட்டில்லாதவர்-அளவில்லாதவர், அதாவது, மிதமிஞ்சிக் கள் குடிப்பவர் ஆங்கிலேயர் - என்பது பொருள்.

(6) டேன் - டென்மார்க் என்னும் தேசத்தைச் சேர்ந்தவன். ஜர்மன் - ஜர்மனி தேசத்தைச் சேர்ந்தவன். ஹால்லெண்டர் - ஹால்லெண்ட் என்னும் தேசத்தைச் சேர்ந்தவன். இவை ஐரோப்பாக் கண்டத்திலுள்ள தேசங்கள். தொங்குந் தொந்தி ஹால்லெண்டர், என்பது, சரிந்த வயிறுடைய ஹால்லெண்டர், என்னும் பொருளது.

'உன்' 'உன்' என்பது, "உன் தமிழன், உன் தெலுங்கன்" என்பதுபோல் பரிகசந் தோன்றும்படி கட்டுரைச் சுவையின்பொருட்டு வந்து.

'குடியுங்கள், ஹோ' என்பது, பேச்சினிடையில் இயாகோ, தானுங் குடித்து மற்றவர்களையுங் குடிக்கச் சொல்வது.

உன் ஆங்கிலேயனுக்கு ஒன்றுமேயில்லை- அளவின்றிக் குடிக்குந் திறமையில் ஆங்கிலேயனுக்குமுன் அவர்கள் நிற்கமாட்டார் - என்பது பொருள்.

(7) இங்கிலாந்து தேசத்தவன், மற்ற தேயத்தைவர்களைக்காட்டிலும் குடிக்குந்திறமையில் எத்தனை மிகுந்தவன் என்பதை இவ்வகையில் விளக்குகின்றான்.

ஒரு டேனும் ஆங்கிலேயனும் சேர்ந்து குடிப்பார்களானால் டேன் செத்தவன்போல் ஆனபின்பும் ஆங்கிலேயன் சுலபமாகப் பின்னும் குடிக்கக்கூடியவனாயிருப்பான். அப்படியே, ஒரு ஜர்மனும் இவனும் சேர்ந்து குடிப்பார்களானல், ஜர்மன் விழுந்தபிறகும் இவன் கஷ்டமில்லாமல் மேலும் மேலும் குடிக்கக்கூடியவனாக இருப்பான். அப்படியே, ஒரு ஹால்லெண்டரும் இவனும் சேர்ந்து குடிப்பார்களானல், அவன் குடி தாங்கமாட்டாமல் வாந்தியெடுக்க ஆரம்பித்தபிறகும் மேலும்மேலும் இவன் கிண்ணம் கிண்ணமாக நிறைத்துக் குடித்துக்கொண்டிருப்பான்- என்பது பொருள் (வட்டில் - கிண்ணம்)

(8) யாரேனும் தங்கள் மதிப்பிற்குரிய ஒருவருடைய பேரைச்சொல்லி, 'அவருடைய சுகத்திற்காகக் குடிப்போம்' என்று குடிப்பது உண்டாடுகின்றவர்களின் மேனாட்டுவழக்கம். தலைவன் என்பது இங்கு ஒத்தெல்லோவைக் குறிக்கின்றது.

(9) நம் தலைவன் சுகத்திற்கு உன்னோடு சேர்ந்து குடிக்கச் சம்மதம்; நான் குடித்தது போதாதென்று நீ குறைகூறாதபடி வேண்டியஅளவுங் குடிக்கின்றேன் பார்—என்பது பொருள்.

(10) இங்கிலாந்தில் வழங்கிவரும் ஒரு பழைய பாட்டு இங்கு இயாகோவினால் முதனூலில் பாடப்பட்டிருக்கின்றது. இப்பாட்டில் குறித்திருக்கின்ற செய்தி சரித்திரசம்பந்தமுடையது. **ஸ்டீபன்** என்பது எண்ணூறு வருடங்களுக்குமுன் இங்கிலாந்தை ஆண்ட ஒரு மன்னவன் பெயர். இவன் மிக நல்லவன். ஆயினும், அவ்வரசு தனக்குத் தான் உரியதென்று இவன்உறவினள் ஒருத்தி **மந்தில்டா** என்பவள் வழக்கும் கலகமும் மிக விளைத்தாள். பிரபுக்களில் சிலர் ஸ்டீபன் சார்பு நின்றனர், சிலர் மத்தில்டாவின் சார்பு நின்றனர். இதனால் நெடுங்காலம் நாடு முழுவதும் சண்டையும் சச்சரவுமாக இருந்து, அரசுமுறையெல்லாம்கெட்டு, ஸ்டீபனும் ஏழையாகிச் சனங்களும் வறுமை



காஸ்:—ஆம், ஆயினும், மன்னிக்க வேண்டும், எனக்கு முன்னல் அல்ல. பதாகையாளனுக்கு முன் அடுத்த அதிகாரியே உய்யவேண்டியவனாக இருக்கின்றான் [13]. இதனோடு போதும் இது: நம் காரியத்தைப் பார்ப்போம்-கடவுள் நம் பாவங்களைமன்னித்தருள்வாராக— கனவான்களே, நாம் நம்முடைய காரியங்களைப் பார்ப்போம் [14]. நான் குடித்திருக்கின்றே னென்று கனவான்களே எண்ணுநீர். இது என்பதாகையாளன்—இது என் வலக்கை, இது என் இடக்கை—நான் குடித்திருக்கவில்லையே இப்பொழுது: நன்றாகவே நான் நிற்கக்கூடும், நன்றாகவே பேசக்கூடும் [15].

எல்லோரும்:—மிக நன்றாக.

காஸ்:—ஏன், ஆயின் நல்லது; நான் குடித்திருக்கின்றே னென்று, ஆயின், நீங்கள் எண்ணலாகாது.

[போகின்றான்]

மான்:—மேடைக்கு வாருங்கள்: காவலை அமைப்போம் [16].

இயா:—இதோ முன்னே சென்ற இவனை நீ காண்கின்றாய். ஸீஸருக்கு அயல்நின்று கட்டளைகள் கொடுக்குமொரு தகுதிவாய்ந்த வொரு போர்வீரன் இவன் [17]; அவனுடைய குற்றத்தையும் பார்; அவன் குணத்திற்கு அது நேரான நாடிமண்டலமாக இருக்கின்றது; ஒன்று எவ்வளவு நீளமோ அவ்வளவு நீளம் மற்றது [18]. இவனில் இது இரங்கத்தக்கதே. இவனிடத்தில் ஒத்தெல்லோ வைக்கின்ற நம்பிக்கையானது, இவனது தளர்ச்சியின் ஓர் விபரீதமானசமயத்தில் இந்தத் தீவினை அசைத்துவிடும் என்று அஞ்சுகின்றேன் [19].

மான்:—மற்று, அடிக்கடி இவன் இப்படியாகவா இருக்கின்றான்?

இயா:—எப்பொழுதுமே இவனது நித்திரைக்குப் பாயிரமாம் இது. கள்தான் அவன் தொட்டிலை ஆட்டா விட்டால், கடியாரத்தை இரட்டை வரிசை அவன் காத்திருப்பான் [20].

மான்:—நம் தலைவருக்கு இதனை நினைவுபடுத்தல் நலம். ஒருகால் அவர் இதனைப் பார்ப்பதில்லைபோலும்; அல்லது, அவரது நல்லியற்கையானது, காஸ்ஸியோவினிடத்தில் தென்படுகின்ற குணத்தையே மதித்து அவன் குற்றங்களைக் காண்கின்றதில்லைபோலும். இது உண்மை யல்லவா?

[ராடரிகோ வருகின்றான்]

இயா:—(ராடரிகோவிற்கு ஒருபுறமாய்) என்ன செய்தி இப்பொழுது ராடரிகோ? அடுத்த அதிகாரியைப் பின்பற்றிச் செல்; போ.

[ராடரிகோ போகின்றான்]

மான்:— மேன்மைக்குணம் வாய்ந்த மூரன், தனக்கே அடுத்ததாம் பதவியை ஊன்றிய ஊனமுடைய ஒருவனில் ஆபத்திற்குள்ளாக்குவது மிகவும் இரங்கத் தக்கதே [21]. அப்படி யதனை மூரனிடம் சொல்வது யோக்கியமான காரியமாகும்.

யால் மிக வருந்தினர். அரசனது பலமும் அரசுமுறையுங் குறையப் பிரபுக்களின் செல்வமும் செல்வாக்கும் பெருகியதாதலால் இதனால் செருக்குற்ற பிரபுக்கள், நாடு அழிந்தாலும் அழியட்டுமென்ற நினைவுடன், சண்டையும் கலகமும் மேன்மேலும்வளர்ப்பதிலேயே கருத்துடையவராயிருந்தனர்-இந்தச்செய்திகள் இயாகோபாடிய பாட்டினுள் அடங்கியிருக்கின்றன. (அதன்பொருள்) ஸ்டீபன் என்னும் மன்னவன் பெருமைவாய்ந்த ஒரு மேன்மகன். ஆயினும், அவன் அடைந்த ஏழ்மையால், அரைப்பணம் விலையேயுள்ள அவ்வளவு தாழ்ந்த அங்கியை அணிய வேண்டியவனாயினன். அந்த அரைப்பணத்தில் கூட, ஆறு காசு அதிகமாகத் தன்னை வஞ்சித்துவிட்டான் தையற்காரன் என்று இவன் அவனை வைவதுண்டு. புகழ் மிகக் கொண்ட ஒரு அரசனுடைய கதியே அப்படியாயிற்றென்றால், தாழ்ந்தபிறப்புடைய நீ வேறு என்ன செய்யக்கூடும். பிரபுக்களின் செருக்கினால் இந் நாடு அழிந்துவிட்டது. ஆகையால் உன் பழம்போர்வையைச் சுருட்டிக்கொண்டு புறப்படு. வேறுநாடு சென்று பிழைக்கும் வழியுளதோ பார்ப்போம்.

(11) மது வெறியினால் ஒன்றோடொன்று ஒவ்வாமற் பேசத்தலைப்படுகின்றான் காஸ்ஸியோ. ஆன்மா கடவுள் உய்கை, யோக்கியதை, முதலியவைகளை உதவிக்கழைக்கப்புகுவது சில குடிகாரர்களுக்கு வழக்கம். தாம் செய்த காரியம் தீமையே என்ற எண்ணம் நெஞ்சில் உறுத்துவதால் இவ்வித வார்த்தைகள் எழலாம்.

(12) உய்யவேண்டியவர்களின் ஒருவன் தான் என்ற நம்பிக்கையைத்தெரிவிக்கிறான். "இப்படிச்சொல்வதால், மூரனேனும் மற்று இங்குள்ளயாரேனும் உய்வதற்குரியவரல்லர் என்று நான் கருதுவதாக எண்ணிக் கோபித்துக் கொள்ளாதீர்" என்ற உபசாரத்தை இடையிற் சேர்த்துக் கொள்கின்றான்.

(13) இயாகோ, தானும் உய்வதற் குரியவன் என்று கூற, காஸ்ஸியோ, "பதாகையாளனைவிட உயர்ந்தபதவி, அடுத்த அதிகாரியாதலால், முதலில் உய்யநிற்பவன் நான்தான்" என்கின்றான்.

(14) புத்தி கலங்கியிருக்கும்நிலையிற்றான் மனிதர் தாம் காரியத்தில் மிகக் கருத்துடையவராகக் காட்டிக்கொள்வார்.

(15) மது வெறியால் தள்ளாடிக்கொண்டே தாம் குடித்திருக்கவில்லை என்பதை வற்புறுத்துவது குடிகாரர் வழக்கம்.

(16) காவல் புரியவேண்டிய காஸ்ஸியோ அதற்குத் தகுதியற்றவனாக இருப்பதால், மான்டானோ அந்தக்காரியத்தைத் தான் மேற்கொள்கிறான்.

(17) காஸ்ஸியோவினிடத்தில் பகைமையினால் தான் பழிக்கவில்லை யென்பதைக் காட்டுவான்போல் முதலில் அவன் தகுதியைப் பாராட்டிப் பேசுகின்றான் இயாகோ. ஜூலியஸ்ஸீஸருக்கே சமானமானவன் இவன்என்றுகூறி, இத்தகையவனிடத்தில் குடிக்கின்ற தீமையும் இருக்கின்றதே என்று இரங்குகின்றான்.

(18) குணத்தினளவு குற்றமும் இருக்கின்றது - என்பது பொருள். சூரியன் நாடிமண்டலத்தில் இருக்கும் போது, பூமியில் பகலும் இரவும் ஒரே காலஅளவு உடையதாக இருக்கும்.

(19) காஸ்ஸியோவிடத்தில் ஒத்தெல்லோ மிக்க நம்பிக்கை வைத்திருக்கிறான். குடிப்பழக்கமாகிய தளர்ச்சியுடைய காஸ்ஸியோ, எப்பொழுதேனும் மதுவெறியினால் செய்யத்தகாததைச் செய்து இந்தத் தீவினுள்ளவர்களுக்குக் கோபமூட்டிக் கலகம் நேரும்படி முடித்துவிடுவான் —என்பது பொருள்.

(20) ஒருகாவியத்திற்கு முன்னுரையாகப் பாடப்பெறுவதுபாயிரம். எப்பொழுதும் இவன் முதலில் குடித்துவிட்டுத்தான் பிறகு நித்திரைக்குச் செல்வான், அப்படிக் குடிக்கவில்லையாயின், கடியாரத்தின் முள்கள் இரண்டுதரம் சுழன்றுவரும்வரையில்(அதாவது, இருபத்துநான்குமணி நேரமும்) கண்விழித்துக் கிடப்பவனாவான்— என்பது பொருள்.

(21) மான்டானோவும் இயோகோவும் குடித்திருப்பவர்களே. இருப்பினும், காஸ்ஸியோவின்பால் அப்பிழையைக்கண்டு மிகவும் பரிகின்றனர். இயாகோதான் வஞ்சனையாகப் பேசுகின்றான் என்றால் மான்டானோவுக்கு அந்த வஞ்சனையுமில்லை. ஆயினும், இவனும் காஸ்ஸியோவி

இயா:—இவ்வழகிய நீவிற்காகவும் நான் மாட்டேன் [22]: காஸ்ஸியோவை நான் நன்கு நேசிக்கின்றேன்; இத்தீமையினின்று அவனைக் குணப்படுத்த அதிகம் செய்வேன். இதோ கேள்! என்ன அரவம்?

["உதவிக்கு வாருங்கள்," "உதவிக்கு வாருங்கள்" என்று கூவுங்குரல் உள்ளே கேட்கின்றது.]

டத்தில் குறைகாண்கின்றான். இது மானுட இயற்கையே. இம்மூவரில் மதுவின்பால் விருப்பமில்லாதவன் காஸ்ஸியோவே. ஒருவன் தான்செய்த தீமையைத் தானே தாங்கிவிடுவானானல் பிறகு அவனையே மற்றவர் வீரனென்று அழைப்பார் போலும்.

(22) இவ்வழகிய தீவைக் கலகமின்றிக் காப்பதற்குக் கூடவும் நான் காஸ்ஸியோவின்மீது கோள்சொல்ல மாட்டேன், என்றேனும், அல்லது, இவ்வழகிய தீவையே நான் பெறுவதாயிருந்தாலும் காஸ்ஸியோவின்மீது கோள்சொல்லமாட்டேன் என்றேனும் பொருள்படலாம்.

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தா காண்டம்—10. கிட்கிந்தைப் படலம்

[303-வது பக்கத் தொடர்ச்சி]

மதுவினல் மாய்ப்பரோ மற்று

இனிச் சுக்கிரீவன் தான் கள்ளுண்டு கிடந்தசெய்தியைத் தானே அங்கதனுக்குஅரிதின்கூறுகின்றான். இதுகாறும் சுக்கிரீவன் தன் கடமையை யாற்றுமற் சோர்ந்ததற்குக் காரணமாக, அவன் அடைந்தசெல்வத்தின் மிகுதியால் விளைந்த களிப்பையே அனைவருங் காட்டிவந்தனர். இராமனும் அன்னதே நினைத்தான், தாரை முதலாயினோரும் அன்னதே நினைத்தனர். மற்று, சுக்கிரீவன் மதுவருந்தி மயங்கிக் கிடந்ததன் தன்மையை, அவனே தன் அகத்தினின்று எழுந்த சொற்களால் அங்கதனுக்கு உரைக்கக் கேட்போம்.

ஏயின விதுவ லான்மற்
றேழைமைப் பால தென்னே
தாயிவண் மனைவி யென்னுந்
தெளிவின்றேற் றரும மென்னும்
தீவினை யைந்தி னென்றா
மன்றியுந் திருக்கு நீங்கா
மாயையின் மயங்கு கின்றா
மயக்கின்மேன் மயக்கு வைத்தாம்

[எனக்கு நேர்ந்துள்ள இதனினும் வேறு இழிவானது என்னவேண்டும். இவள் தாய்,இவள் மனைவி,என்ற வேற்றுமையே தெளியப்படாமற் போய்விடுமெனின் கட்குடியனிடத்தில் என்ன தர்மம் எதிர்பார்க்கக்கூடும். பஞ்சமாபாதகங்களில் ஒன்றாம் இது. அன்றியும், வஞ்சனை நீங்காத இப் பிரபஞ்சமாயையில் அகப்பட்டு மயங்குகின்ற நாம், அம் மயக்கத்தின்மேல் இம்மதுவாகிய இன்னொரு மயக்கத்தையும் வைத்தோம்.]

என்பான். இவள் தாய் இவள் மனைவி யென்ற தெளிவின்றி முறைபிறழ்ந்தவன் தாரையைத்தழுவிய அவ்வடனால் சுக்கிரீவனையன்றி இவனல்லன். ஆயினும் அம்மொழியில் தான் இழைத்த பழிக்கும் இங்குக் கழிவிரக்கங் கொள்ளுகின்றான் போலும். இப் பிரபஞ்ச வஞ்சனைகளின் திரட்சியை, 'எனது உனது' என்னு மாயமுடைய வேற்றுமையுள் காணல்வேண்டும். தனது ஏதோ வாலியினுடையதாகிவிட்டதென்னும் வஞ்சினம் முடிக்கவே சுக்கிரீவன் இராமனைக் கொல்வித்துப் பிறகு அவ்வாலியினது ஏதோ தன்னுடையது ஆகிவிட்டதென் றிருந்துவிட்டான். இது ஓர் பெரிய மயக்கம் என்பது இப்பொழுது சுக்கிரீவனுக்குத் தெரியவருகின்றது. அதன்மேல் இம்மதுவாம் வேறோர் மயக்கத்தை வைத்த பிழையைப்பேசுகின்றான். எற்றுக்கு மதுவின் மயக்கத்தை வேண்டினான்? அம் முதல் மயக்கத்தினுல் விளைந்த நிலைமையைத் தணிக்கவோ கனற்றவோ அவன் எந்நோக்கத்துடன் அன்னது செய்தனன்? இதற்குரியவிடையை,

தெளிந்துதீ வினையைத் தீர்ந்தோர்
பிறவியிற் றீர்வ ரென்று
விளிந்திலா வுணர்வி னோரும்
வேதமும் விளம்ப வேயும்
நெளிந்துறை புழுவை நீக்கி
நறவுண்டு நிறைகின் றோனல்
அளிந்தகத் தெரியுந் தீயை
நெய்யினு லவிக்கின் றாமால்

[தீவினையின் தன்மையைத் தெளிந்து அதனை விட்டவர், பிறவித்துன்பத்தினின்று நீங்கியவராவார், என்று, அழியாத உணர்வுடைய வித்தகர்களும் வேதங்களும் சொல்லியிருக்கவும், அவ்வறிவைக் கைக்கொள்ளாமல், நெளிந்துகொண்டு கிடக்கின்ற புழுவை எடுத்து எறிந்துவிட்டுக் கள்ளைக்குடித்து என்னை நிறைத்துக்கொள்ளப்பார்க்கின்றேனே. உள்ளிடம் கனிந்து எரியும் நெருப்பை நெய்யினுல் அவிக்க முயல்பவர்போல் முடிகின்றோமே.]

என்னும் பாசுரத்தினுள் ஒருவாறு காணலாம். "நெருப்பை நெய்யினுல் அவிக்கின்றோம்" என்ற அந்தப் பன்மை வாசகம் தன்னைப்போன்ற கட்குடியரையெல்லாம் உளப்படுத்திப் பேசியதொன்றாம். குடிப்பழக்கம்மிருந்தவர் சரித்திரத்தின் பெரும்பாகம், உள்ளத்தைக் கனற்றுமொன்றை அவிக்கப்புகுகின்ற முயற்சியேயாக நேர்ந்திருக்கின்ற செய்தியை அறிந்துகொள்வது அருமையன்று. சுக்கிரீவன் இங்குத் தன்னையும் அன்னவர்களில் ஒருவனுகச் சொல்லிக்கொள்கின்றான். எனின் தன் மனத்திருந்த வருத்தத்தை மாற்றுதற்கு மதுவை மாந்தினன் அன்றிப் புதியதோர் இன்பத்தைப் பெறுவதற்கு இது செய்தானென்ன எண்ணற்கில்லை. எனின், வாலியின் ஆற்றலை மாற்றுதற்கு வேறோர்கூற்றுவனை மறையக்கொணர்ந் தவனை மாய்வித்தான் ஆனுலும், தான்செய்த அச்சதியின் பொருட்டுக் கழிவிரக்கங் கொண்டுழன்ற மனத்தினனுயினன் இச்சுக்கிரீவன் என்ன உணர்த்துமாற்றால் கம்பர் அவன்பால் நம்மனோர்கொள்ளவல்ல வெறுப்பினைத் தணித்திட முயலலாகின்றார். எம்பெருமான் இராமபிரானுக்குத் துணைவன் எனலாய ஒருவன்



ஓரளவேனும் அளியனுதலே அமையும். "மயக்கின்மேல் மயக்கு வைத்தாம்" என்பதனோடு, "அளிந்தகத் தெரியுந் தீயை நெய்யினுல் அவிக்கின்றாம்" என்பதனையும் சேர்த்து மதிக்குங்கால், ஏசறவுற்ற மனத்தை மறவியால் அவிப்பதற்கு இம்மதுவும் அவனுல் பருகப்பெற்ற தன்மை விளங்கவருகின்ற தாதலின், இவன் நன்றியெல்லாம் நெகிழ்ந்துபோக நறவம் மாந்தினன் என்ற பழியும் ஓரளவு குறைதல் வேண்டும். இங்ஙனம்,தன்கைச் சேர்ந்த சுக்கிரீவன்சித்திரத்தை ஒருசிறிது செம்மைசெய்து காட்டுவார் ஆகின்றார் கம்பர். இன்னதன்மையனுகிய சுக்கிரீவன் பின்னுங் கூறுவான்:

தன்னைத்தா னுணரத் தீருந்
தகையறு பிறவி யென்ப
தென்னைத்தான் மறையு மற்றைத்
துறைகளு மிசைத்த வெல்லா
முன்னைத்தான் றன்னை யோரா
முழுப்பிணி யழுக்கின் மேலே
பின்னைத்தான் பெறுவ தம்மா
நறவுண்டு திகைக்கும் பித்தோ

['ஒருவன் தன்னையே உணர்ந்துகொள்வானுனல், பெருமையற்ற பிறப்பானது நீங்கிவிடும்' என்னவே வேதங்களும் மற்ற சாஸ்திரங்களும் எல்லாம் சொல்லியிருக்கின்றன. முதலிலேயே தன்னை உணர்ந்துகொள்ளாத வியாதியாகிய அழுக்கின்மேலே, பின்னும், கள்ளுண்டு மயங்குகின்ற பித்தத்தையும் சேர்த்துக்கொள்வார்களோ]

அளித்தவ ரஞ்சு நெஞ்சி
னடைத்தவ ரறிவு மூழ்கிக்
குளித்தவ ரின்ப துன்பங்
குறைத்தவ ரன்றி வேரி
யொளித்தவ ருண்டு மீண்டிவ்
வுலகெலா முணர வோடிக்
களித்தவ ரெய்தி நின்ற
கதியொன்று கண்ட துண்டோ

[அருளோடு மற்றவர்களைக் காத்தவரும், ஐம்பொறிகளையும் மனத்தில் அடக்கியவரும், அறிவில் ஆழ்ந்திருப்பவரும், சுகத்திற்கும் துக்கத்திற்கும் இடையே இருக்கும் அவ்வேற்றுமையைக் குறைத்தவரும், அல்லமால், கள்ளை மறைந்து குடித்து, பிறகு வெறிகொண்டு, இவ்வுலகில் எவரும்அறிய ஓடிக் களித்தவர், அடைந்த நற்கதியை எவரேனுங் கண்டறிந்ததுண்டோ]

என்கின்றான் சுக்கிரீவன். எரிநெருப்பை நெய்யினுல் அவிக்கின்றபேதைமையே மீண்டும் இங்குப் பலபடி பேசப்பட்டிருக்கின்றது.

Ah my Beloved, fill the Cup that clears
To-day of past Regrets and future Fears.

என்று பாரஸீகப் புலவர் உமார் கயாம் புலம்பியது போன்று, உற்றுநின்ற துயரத்தினின்று தப்புவதற்குரிய வோர் உபாயமாக மதுவின் உதவியை அழைப்பதன் அறிவீனத்தைப் பேசும் வாசகங்கள் இவை சாலவும் அருமைவாய்ந்தன. உள்ளுறை துன்பத்தைக் கள்ளெனும் அறியாமையுள் முழுக்க முயல்வார் மேலும் மேலும் நைவார்; மற்று அறிவினது தெளிவில் மூழ்குவோர்தாமே உய்வார். துன்பத்தை மறத்தலினுலோ அது தீராது. துன்பத்தோடு அதனிற்குக் காரணமாயிருந்தவைகளையும் உணர்வதே நன்மருந்தாம் என்பதை உட்கொண்டு மேலுங் கூறுகின்றான்:—

செற்றதும்பகைஞர்நட்டார்செய்தபேருதவிதானும்
கற்றதுங் கண்கூ டாகக் கண்டதுங் கலைவ லாளர்
சொற்றதுமானம்வந்துதொடர்ந்ததும்படர்ந்ததுன்ப
முற்றதுமுணர்வாராயினுறுதி வேறிதனினுண்டோ

[பகைவர்கள் தமக்குச் செய்த தீங்கையும், சிநேகிதர்கள் செய்த பெரிய உபகாரத்தையும், தாம் கற்றவைகளையும் கண்டறிந்தவைகளையும் கலைவல்லவர்கூறியவைகளையும், பெருமை தம்மைவந்து அடைந்ததையும், துன்பம் படர்ந்தணுகிச் சேர்ந்ததையும், அறிவாரானுல், இதனைக் காட்டிலும் நன்மைதருவது வேறு ஒன்று உண்டோ.]

வஞ்சமுங்களவும்பொய்யுமயக்கமுமரபில்கொட்புந்
[தாக்குந்
தஞ்சமென் றாரை நீக்குந் தன்மையுங் களிப்புந்
கஞ்சமெல்லணங்குந்தீருங்கள்ளினுலருந்தினுரை
நஞ்சமுங் கொல்வ தல்லா னரகினை நல்கா தன்றே

[கள்ளினுல், வஞ்சனையும் களவும்பொய்யும் மயக்கமும் ஒழுங்கற்ற கொள்கைகளும், தஞ்சமென்று அடைந்தவர்களை நீக்குகின்ற குணமும், செருக்குமே ஒருவனைத் தாக்கும். தாமரையில் வசிக்கின்றமெல்லிய தன்மையுடைய இலக்குமியும் நீங்கிவிடுவாள். (கள்ளைவிட விஷமே மேல், ஏனெனில்)விஷமும், தன்னைக் குடித்தவரைக் கொல்லுமேயல்லாமல்,கள்ளைப்போல் நரகத்தைக் கொடுக்காது.]

என நஞ்சிற்கும் நறவிற்கும் உள்ள வேற்றுமையைச் செவ்விதின் காட்டி யெவ்வெவர் மனத்தினின்றும் நீங்காவணம்நிறுவுகின்றான்.நிறுவிப்பின், இத்தகைய கள்ளினுல் தான் அடையநின்ற பெருங்கேட்டையும் அதனின்று தப்பிய அருமையையும்,

கேட்டன னறவாற் கேடு
வருமெனக் கிடைத்த வச்சொற்
காட்டிய தனும னீதிக்
கல்வியாற் கடந்த தல்லான்
மீட்டினி யுரைப்ப தென்னே
விரைவின்வந் தடைந்த வீரன்
மூட்டிய வெகுளி யானுன்
முடிவதற் கைய முண்டோ

[கள்ளினுல் கேடுவரும் என்பதைக்கேட்டிருக்கிறேன். அச்சொல்லின்படி ஏற்பட்ட ஆபத்தினின்று,அனுமனது நீதிநூல் உணர்ச்சியால் தப்பினும் என்பதன்றி வேறு இனி ஒன்று சொல்வானேன். விரைவாக வந்தடைந்த இலக்குமணனது மூண்ட கோபத்தினுல் நான் இறந்து ஒழிவதற்கு ஐயமில்லையே.]

ஐயநா னஞ்சி னேனிந் நறவினி னரிய கேடு
கையினு லன்றி யேயுங் கருதுதல் கருமமன்றால்
வெய்யதாமதுவையின்னும்விரும்பினேனென்னின்
செய்யதாமரைகளன்னசேவடிசிதைக்கவென்றான்

[ஐய, இக்கள்ளினுல் வரும் அரியகேட்டிற்கு நான் அஞ்சினேன். அக்கள்ளை இனிக் கையினுல் தீண்டுவதல்லாமல் மனத்தினுல் நினைத்தலும் தக்கதன்று. கொடிய இம்மதுவை இன்னும் விரும்பினேனுனல், இவ்வீரனது செந்தாமரைபோன்ற சிவந்த பா[illegible] அழிப்பன ஆக—என்றான்.]

199218
m 211, N 21 K 1

கதிரோன் மைந்தன் கவன்று உரைத்த சொற்கள் இவை அவனது செய்கையின் தன்மையையும் உள்ளத்தின் நிலையையும் நன்கு உணர்த்துகின்றன. செல்வக் களிப்பினால் இவன் செம்மாந்திருந்தான் என்ன ஏனையோர் மதித்த பரிசின்றி, அச்செல்வம் தனக்கு எய்துமாறு புரிந்த கருமத்தினது தகுதியின்மையின் பொருட்டுத் தன்னை வருத்திய மனத்தினை உணர்ச்சியற மாய்ப்பதற்கு உதவியாகவே மதுப்பருகிக் கிடந்தனன் என்னுமக் கொள்கையைக் குறிக்கொள்வதன்றியும், வான்மீகத்தினின்று இக் கம்பர் நூல் விலகுகின்ற வேற்றுமையினால் இவ்வியற்கை வலியுற வெளிப்படுந் தன்மையுங் கருதத்தக்கது. இரண்டு நூல்களிலும் சுக்கிரீவன் குடித்துக் கிடந்தனன். ஆயினும், வான்மீகத்தில், சுக்கிரீவன் தாரை அங்கதன் அனுமன் அனைவரும் இவ்விடயம்பற்றி இயம்பியவைகளையெல்லாந் திரட்டி நோக்குங்கால், அச்சுக்கிரீவனது கருத்து, காமவேட்கையில் சென்றதென்னுஞ் செய்தியே வற்புறுத்தப் பெற்றதாகி, கள்ளானது அக்காமத்தைக் கனற்றற்கமைந்தவொன்றாகவே உரைக்கப் பெற்றிருக்கின்றது. கம்பரோ, சுக்கிரீவனது காமத்தையொன்றுங் காட்டாமல் கள்ளின் மயக்கத்தையே எங்கும் பேசினர். முன்னே சொல்லியிருப்பவைகளை நினைவிற் கொண்டக்கால் இவ்வேற்றுமையின் காரணத்தைக் காணுதல் அருமையன்று. செல்வத்தைத் துய்த்துக்களிக்குமொரு சுக்கிரீவனைக் காட்டினார் வான்மீக முனிவர்; அன்னதற்குத் தாரையின் இழிவுங் கைதந்துதவவேண்டியிருந்தது. கம்பர் நூலினுள் புகுந்தபோது சுக்கிரீவனது மனத்தின் பண்பு மாறி, முறையல்லா நெறியில் தான் பெற்ற செல்வத்தைக் காணக்காணக் கவன்று, அக்கவற்சியை மாய்ப்பதற்கே முயன்றவனாயினானாதலின், மதுவின் உதவி மாத்திரம் அழைக்கப்பெற்றிருக்கின்றதென்பதையறிதல் வேண்டும்.

எனின், உண்டாகியவோர் வருத்தத்தை விலக்குமாறு தான் செய்த இந்தக்காரியம், மயக்கின்மேல் மயக்கை வைப்பதும், நெருப்பினை நெய்யினால் அவிக்கப் புக்கதும் போன்றதொன்றே என்பதையுணர்ந்து இச்சுக்கிரீவன், அளித்தலும் அஞ்சினை நெஞ்சிடையடைத்தலும் அறிவு மூழ்கிக் குளித்தலும் இன்ப துன்பங் குறைத்தலும் அனைய சிற்சில சாதனங்களே உண்மையாக உய்கைக்குரிய நெறியாம் என்பதனை இன்று தெளிந்துகொண்டனன். இந்தத் தெளிவு விளைந்துவிடுமாயின் பின்னர் எவனுமே பெருமைசான்றவனாகிவிடுகின்றான். முன்னைய தீமை எல்லோர்க்கும் இருக்கலாம், ஆயினும் தீமையைத் தணிக்கும் நெறி நீமையாம் என்னும் அவல நினைவுகளை நீத்து, அறிவையும் அறத்தையுங் கொண்டல்லாமல் மயக்குறு கயப்பை மாற்றலரிது என்னும் பின்னைய நிலைமை எய்திநிற்பவன் அருமையுடன் பாராட்டற்குரிய பெருமையோனாகின்றான் என்பதைக் காட்டவே கம்பர் இச் சுக்கிரீவனை அடுத்த செய்யுளில், "நிறைந்த சீரான்" எனக் கவிக்கூற்றாக அழைத்தார்போலும்.

# சூரியன்

[297-வது பக்கத் தொடர்ச்சி]

## சூரிய குடும்பம்

### 7. சனி

*உரைசெய் காரிதேர் காருருக் காயொலி முகிலிற்*
*கரிய வெண்ணத்த கடுநடைப் பரியொடுங் கவினுமே.*

இலிங்கபுராணம் - (55-ம் அத் - 4).

சில குறிப்புக்கள்:—வியாழமண்டலத்திற்கு அடுத்ததாக வருவது, சனிமண்டலமாகும். இது சூரியனுக்கு 885,000,000 கல் தூரத்தில் இருக்கின்றது. இவ்வளவு தூரத்திலிருந்தாலும், நமது ஊனக்கண்ணுக்குப் புலனாகிறது. வியாழனுக்கும் சூரியனுக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கின்றதோ, சற்றேறக்குறைய அவ்வளவு தூரம், வியாழனுக்கும் சனிக்கும் இடையே உண்டு. இக்கிரகத்தைப் பூமியுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், அரியதோர் எண் ஒற்றுமை தற்செயலாக அமைந்துகிடக்கக் காண்கிறோம். இதனுதவியால், அதனைப்பற்றிய சில குறிப்புக்களை எளிதிலேநாம் ஞாபகத்தில்வைத்துக்கொள்ளலாம். சூரியனுக்கும் சனிக்கும் இருக்கின்ற தூரம், சூரியனுக்கும் பூமிக்கும் இருக்கின்ற தூரத்தைவிட (9·5) ஒன்பதரை மடங்கு அதிகமாகும்; இதன் குறுக்களவு, பூமியின் குறுக்களவைவிடச் சற்றேறக் குறைய (9·5) ஒன்பதரை மடங்கு அதிகமாயிருக்கிறது. இதன் எடை, பூமியின் அளவைவிட 850 மடங்கு அதிகமாகும். இது நிற்க. இதனில் உள்ள பொருள்கள் நீரைவிட இலேசானவை. நீரின் கனம் 100 என்றால், இப்பொருள்களின் கனம் 30 எனலாம்; நீரில் மூன்றிலொன்றே இவற்றின் கனநிலை. இவை மரப்பட்டைபோல இலேசானவை எனக் கூறலாம். பலவகையாலும் நோக்குமிடத்து, இது வியாழனோடு ஒத்து உள்ளது. இவ்விரு கோள்களும் மிகப்பெரிய கோள்களாகும். இவையிரண்டின் துருவ ஸ்தானங்களும் தட்டையாகவே கிடக்கின்றன. இந்த இரண்டு கிரகங்களும் தம்மைத்தாமே வெகுவேகமாய்ச் சுற்றிவருகின்றன. இவையிரண்டிற்குந்தான் அநேக உபகிரகங்கள் உள்ளன. வியாழனிற் கண்டதுபோலச் சனியிலும் நாடிமண்டலத்திற்கு நேராக, அநேக கருங்கோடுகளைக் காண்கிறோம். சனிக்கிரகம் சூரியனைச் சுற்றியோட, $29\frac{1}{2}$ வருஷங்கள் ஆகின்றன. இவ்வாறு வெகு மந்தமாகச் சூரியனைச் சுற்றிவருவதனால், நமது நாட்டாரும் மேல்நாட்டாரும் இதனிற்கு மந்தன் (Lead) என்று பெயரிட்டுள்ளனர். இக்கிரகம் தன்னைத்தானே ஒருதரம் சுற்றிவர, ஏறக்குறைய 10 மணி 15 நிமிஷ நேரமாகின்றது. இதனைச் சேர்ந்த தூமகேதுக் கூட்டங்கள் இரண்டு. இவை ஏறக்குறைய 13 வருஷத்திற் கொருமுறை நமக்குக் காட்சியளிக்கின்றன.

சனி வளையம்:— மற்ற கிரகங்களில் காணலாகாத சில சிறப்பியல்புகள் இக்கிரகத்தே காணக்கிடக்கின்றன. இவை மிக்க ஆச்சரியத்தை விளைக்கின்றன. தூரதிருஷ்டிக்கண்ணாடிவழியே காணும்போது, மற்றைய



கிரகங்களைப்போலத் தனித்திராமல், ஒரு வளையத்தினுள்ளே (Ring) இது வீற்றிருக்கின்றது. இவ்வளையம் ஒன்றோ பலவோவென்று வானசாஸ்திரிகள் சில காலமாகச் சந்தேகித்து ஆராயத் தொடங்கினார்கள். தூர திருஷ்டியை முதல்முதல் கையாண்ட கலிலியோவுக்கு இவ்வற்புதம் வளையம்போலத் தோன்றவில்லை. இக்கோளத்தின் இருபுறத்திலும் சிறு பந்து போன்ற வடிவங்களையே அவர் கண்டார். இத்தோற்றம், அவருக்குப் பெரியதொரு வியப்பைத் தந்தது. மறுவருஷத்தில், இப்பந்துகள் அவருக்குத் தரிசனம் தரவில்லை. பிறகு, இவ்வாராய்ச்சியைத் தொடர்ந்து செய்துவந்த ககோளசாஸ்திரிகள், வளையத்தைக்கண்டனர். இதனை மேனாட்டார், புறக்கோள் (Superior planet) என்பதற்கு இணங்க நம்நாட்டவர்களும், இதனை, மேற்கோள் என வழங்கி வந்துள்ளார்கள். ஆதலின் இதன் இயல்பை அவர்கள் அறிந்திருத்தல் கூடும்.

வளையங்களின் காட்சி:— இக்காலத்துக் ககோள ஆராய்ச்சியில், இந்தக் கிரகம் உருண்டை வடிவோடு தோன்றுகின்றது. இதன் நாடிமண்டலத்திற்குமேல், சிறிது தூரத்தில் மூன்று தட்டையான வளையங்கள் ஒன்றின்மேல் ஒன்றாய், இதனைச் சுற்றிச் சுழன்று வரக் காண்கின்றோம். பெரிய தூரதிருஷ்டியைக் கொண்டு பார்க்கையில், பிரகாசமான இரண்டு வளையங்கள், முதலில், தோன்றுகின்றன. இவ்விரண்டில், உள்ளேயுள்ளது, வெளியேயுள்ளதைவிட மிகப்பிரகாசமாய் விளங்குகின்றது. இவ் வுட்சக்கரத்தினுள்ளே, விசித்திர மோகன வடிவான மூன்றாவது சக்கரம், மிக அழகாகத் தோன்றுகிறது. அது, காண்பதற்கு நீலமேக சாமளவர்ணமாக விளங்குகிறது. இன்னும் வேறு எத்தனைவளையங்கள் உள்ளனவோ அறியோம்.

வளையங்களின் இயல்பு:—இந்த வளையங்கள், கனமின்றி மெல்லியனவாகவும் தட்டையாகவும் விளங்குகின்றன. இவற்றின் குறுக்களவானது, சற்றுஏறக்குறைய 170,000 கல்லாகும். வெளி வளையத்தின் வெளிப்புறத்திற்கும், உள்வளையத்தின் உட்புறத்திற்கும் இடையிலே 38,000 கல் தூரம் இருக்கின்றது. சனிக்கோளின் குறுக்களவு 74,000 கல்லாகும். ஆகையால் இக்கிரகத்திற்கும் இவ்வளையத்திற்கும் இடையே, 10,000 கல் தூரம், வெட்டவெளியாக இருத்தல் வேண்டும். இவ்வளையத்தின் கனம் 50, கல்லாம். இந்த அளவுகளைக் கண்ட சிலர், வளையங்களேயில்லை என்றும், இவைகள் வெறுந் தோற்றமேயென்றும் கருதுகின்றனர். இவ்வளையத்தைக் கண்டுபிடித்த காலத்திலிருந்து 200 வருஷ காலம் வரை, இவை, சக்கரவட்டம் போலத் தொடர்ச்சியாகவும் கெட்டியாகவும் உள்ளன என்று எண்ணிவந்தனர். 18-ம் நூற்றாண்டின் முடிவிலே, லப்லாஸ்(Laplace) என்னும் கணித சாஸ்திரியார், இவற்றின் ஓட்டத்தை ஆராய்ந்து, இவ்வளையங்கள் கெட்டியாக இருக்க முடியாதென்று, பல காரணங்கள்காட்டி நிரூபித்தார். இப்போது இவ்வளையங்கள் தனித்தனி யியங்கும் உறுப்புக்களால் அமைந்தவை என நம்புகின்றனர். சூரிய குடும்பத்தைப்போல, இங்கொரு சனி குடும்பம் உண்டு. இவை யாவும், சனியை நோக்கி ஒரு முகமாக ஓடுகின்றனவாம். இது சிலர் கொள்கை. வேறு சிலர், 'வளையம் என்பது உண்மையில் அங்கு இல்லை' என்பர்; 'சனிக்கிரகம் வெகு வேகமாய் ஓடுவதால், வளையம்போல, ஒரு தோற்றம் எழுகின்றதாம்; இது வெறும் மயக்கேயாம் (Optic illusion) என்பர்.

உஷ்ணமும் ஒளியும்:—சனிக்கிரகம், சூரியனுக்கு வெகு தூரத்தில் இருப்பதால், ஆராய்ச்சிக்கு அதிக இடம் கொடுப்பதில்லை. நமக்குக் கிடைக்கும் சூரியவொளியில், நூறில் ஒரு பங்கே அங்குக் கிடைக்கின்றது. சனிக்கிரகத்தின் உஷ்ணமே அதற்கு ஜீவாதாரம் எனக் கொள்ளலாம். இது வியாழனைப்போல, அவ்வளவு உஷ்ணமாக இராவிடினும், செந்நிறமாகத் தோன்றுவதால், ஈதும் உஷ்ணம் தணியாமல் விளங்குகின்றதென்றே கொள்ளல்வேண்டும். இதனுள்ளே, ஜீவர்கள் உளரோ இலரோ நாம் அறியோம்.

உபகிரகங்கள்:—இக் கோளத்திற்கு 10 உபக்கிரகங்கள் உள்ளன. நமது சந்திரனைப்போலவே இவையும் சனிக்கு எதிரே ஒருபுறத்தை மட்டும் காட்டிச் சுழல்கின்றன. இவை உஷ்ணமாயிராமல் குளிர்ந்துவிட்டமையால், சீவர்கள் இங்கே வசிக்கலாம் என நாம் அனுமானிக்கலாம். ஒன்று மற்றவற்றிலாக இவற்றின் வெளிச்சம் இவற்றிலே தெரிதலால், இரவில், பலநிலாக்கள் தோன்றக் காண்பர் அங்கு உள்ளவர் பகற்காலத்திலோ, வசந்தகாலஇளவேனிற்போல வெப்பம் அளவாக இருக்கும். சூரியன், தாருகாசுரன் ஆணைக்கஞ்சி, அவனாட்டில் சித்ரதீபம் போலக் காய்ந்துவந்தான் எனக் காளிதாசர் கூறுவதுபோல, சூரியன் அளவாகக் காய்கின்றான் எனலாம். இவை, இவ்வகைகளினால் கற்பகநாடு போலக் கண்டோரைக் களிக்கச் செய்கின்றன. இவ்வுபகிரகங்களில் மூன்றினை, வியாழனுடைய உபகிரகங்களிற் பெரியனவாகிய மூன்றோடும் ஒப்பிடலாம். டைடான் (Titan) என்னும் அது சந்திரனைக்காட்டிலும் பெரியது. ரீயா (Rhea) என்பதும், ஐயாபெடஸ் (Iapetus), என்பதும், 100 கல் குறுக்களவுள்ளவை. இவற்றிற்கு அடுத்தாற்போல் உள்ள 5 உபக்கிரகங்களின் குறுக்களவுகள் 800 அல்லது 900 கல் முதல் 200 கல் வரை பலதிறப்பட்டுள்ளன. பீபி (Phoebe) என்பதனையும், மற்றும் ஒரு சிறிய உபகிரகத்தையும், 1898-ம் வருஷத்தில் கண்டுபிடித்தார்கள். இதனில் ஒன்றன் குறுக்களவு 50 கல்லாம். இவைகளைப் பற்றி நமக்கு அதிகம் தெரியவில்லை.

மைம்மீன் புகைதல்:— சனிக்கிரகம், சூரியனைச் சுற்றி முப்பதுவருஷத்திற்கொருமுறை ஓடி வருகையில், சூரியவீதியிலுள்ள பன்னிரண்டு இராசிகள் ஒவ்வொன்றிலும் இரண்டரைவருஷம் தங்குவதுபோலத் தோன்றுகின்றது. சூரிய வீதியாவது, அசுவனி முதல் ரேவதி ஈறாகவுள்ள நக்ஷத்திரங்களாகும். ஒவ்வொரு நக்ஷத்திர எல்லையையும், நான்கு நான்காகப் பிரிக்க, 108 பிரிவாகும். இவற்றில் ஒன்பது ஒன்பது பிரிவுகளை, ஒவ்வொரு வீடாக்க, 12 வீடுகள் வரும். இவையே மேஷம் முதலான பன்னிரண்டு இராசிகளாகும். 'அகப்பட்டவனுக்கு அஷ்டமத்தில் சனி; ஓடிப்போனவனுக்கு ஒன்பதாமிடத்தில் இராஜா (குரு)' என்ற பழமொழி வழங்குவதோடு, சனி, சூரிய வீதியில், ஒவ்வொரு நக்ஷத்திரத்தின் அருகில் இருக்கும்போது, ஒவ்வொரு வகையான பலன் அளிப்பான், என முன்னோர்கள் நம்பி இருக்

தனர். சில நிகழ்ச்சிகள் உலகிற்கே பெருந் தீங்கு விளைப்பன என அவர்கள் எண்ணிவந்தனர்.

“கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்”

—சிலப்பதிகாரம்.

என்று இளங்கோவடிகள் பாடுகின்றார். இந்தக்கருத்தினையே,

மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்
தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்

—புறநானூறு.

எனக் கபிலர் பாடுகின்றார். கரியவன் எனினும், மைம்மீன் எனினும், சனியேயாம். அவன் புகைதலாவது, சனி தூமனோடு கூடுதல் என்பர் அரும்பத உரைகாரர்; சனிவளையங்களினிடையே தோன்றும் காட்சியைக் குறிக்கின்றனரோ, அல்லது தூமகேதுவோடு சனி தோன்றுதலைக் குறிக்கின்றனரோ, அறியோம். இனி, அடியார்க்கு நல்லார் ‘சனிக்கோள் இடபம், சிங்கம், மீனம் என்னும் இவற்றினோடு மாறுபடினும்’ என்று பொருள் கூறுகின்றார். தசரதர் அரசாண்ட காலத்தில் கருப்பு ஒன்று நிகழ, அதற்குக் காரணமாக இடபராசியில் இருக்கும்உரோகணியைப்பிளந்துகொண்டு சனி வந்திருப்பதைக்கண்டு, தசரதன், பத்துத் திக்கும் செல்லும் தன் தேரை,மேலேயும் செலுத்திச் சனியினிடம்சென்றபோது, சனீச்சுரபகவான், மனமகிழ்ந்து தசரதன் வேண்டுகோளுக்கிணங்கி, அக்கருப்பு ஒழியுமாறு, இடபத்தைவிட்டு அப்புறம் போயினன் எனப் புராணம் கூறுகிறது. மீனத்தில், கனி ஓடும்போது தீமை விளையும் என்பதனை, ஞானசம்பந்தர்,

விலங்கமலர் புயன்மறந்து மீன்சனிபுக்
கூன்சலிக்குங் காலந்தானும்
கலக்கமிலா மனப்பெருவண் கையுடைய
மெய்யர்வாழ் கழுமலமே.

என்ற பாட்டிற் குறித்திருப்பது காண்க. சிங்கத்தில் போதலும் தீதென்றே முன்னோர் கருதினர். மகம் எனும் நக்ஷத்திரம் சிங்கஇராசியில் இருக்கிறது. அம்மகத்திலே சனி போடும்போது பெருந் தீங்கு விளையும் எனப் பண்டையோர் கருதினர். ‘அடையார் தமக்கு மகத்திற் சனியன்ன சந்திரவாணன்’ என்று பொய்யாமொழிப் புலவர் பாடுகின்றார். இதற்குரை எழுதிய குன்றத்தூர் அஷ்டாவதானம் சொக்கப்ப நாவலர், “மகத்திற் சனிவருங்கால் உலகிற்குத் தீமை பயத்தலால் ‘அடையார் தமக்கு மகத்திற் சனியன்ன சந்திரவாணன் எனக் கூறியது.

“மகத்திற் புக்கதோர் சனியெனக் கானாய்”

என்று சுந்தரமூர்த்திசுவாமிகள் ஓதியவாற்றானும் உணர்க” என விளக்கியுள்ளார்.

சகத்துக் கொருவ னெனும்விசயன்
றம்முற் குதவி செய்யாமன்
மகத்திற் சனிபோல் வளைக்குவம்யாம்
எனவஞ் சினமும் பலசொன்னார்

பதினோராம் போர் - 40

என்று வில்லியார் பாடுகின்றார். இறைவனையே பழித்துப்பாடி யருள்பெற்ற சுந்தரர்பாடலைச் சொக்கப்ப நாவலர் குறித்ததைக் கண்டோம். சுந்தரமூர்த்திநாயனார் சங்கிலியாரைப் பிரிவதில்லை என்று கூறிய சூள் பொய்த்துப் பிரிந்தபோது, கண்ணிழந்து வருந்துங் காலத்தில், மாணிக்கத் தியாகரைப் பாடும்பாடலையே, இவர்கள் எல்லாம் சுட்டுகின்றனர்.

மகத்திற் புக்கதோர் சனியெனக் கானாய்
மைந்தனே மணியே மணவாளா
அகத்திற் பெண்டுகள் நானொன்று சொன்னால்
அழையேற்போ குருடாஎனத் தரியேன்
முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன்
முக்கணா முறையோ மறையோதீ
உகைக்குந் தண்கட லோதம்வந் துலவும்
ஒற்றியூரெனும் ஊருறை வானே

---

# வில்லிபாரதம்

[302-வது பக்கத் தொடர்ச்சி]

## துச்சாதனன்.

துரியோதனனது குண விசேடங்களை விரிவாக ஆராய்ந்தபோது, அவனது தம்பி துச்சாதனனைப் பற்றியும் சிறிது கருதினோம். தன் தமையனது மனத்திலிருக்கும்கொடிய எண்ணங்களைத்தன்முகமாகஎடுத்துரைத்தும் அவன் நினைத்த காரியங்களைக் குறிப்பறிந்து செய்தும், துரியோதனனுக்கு வரும் வசைகளையும் பழிகளையும் தனக்கு இசையாக்கிக் கொள்பவன் அவன் என்பதும் கண்டோம். துரியோதனனுடைய ஏவல்களை இவன் மேற்கொள்வதை,நாய்,குதிரை முதலிய விலங்குகள் ஏவல் மேற்கொள்வதுடன் ஒப்பிட்டாயிற்று.இவ்வாறு அவனை மிருகவரிசையில் சேர்த்தெண்ண வேண்டியதல்லாமல், ஆன்ம உணர்ச்சி யில்லாவிடினும், அறிவின் வழியே செல்லும் சாமானிய மனிதனாகவாவது கருதுவதற்கில்லை. ஏனெனின் அறிவின் வழியே செல்லும் மனிதனது ஆயுந்திறனும், ஒளி மறைவும் அவனுக்கில்லை. சுயோதனனும் வன்மைமிக்க பகைவனேனும், தம்பியைப் போலவே இளக்காத வன்னெஞ்ச முடையவனேனும், ஆன்ம சிந்தனை யென்பதை அவனும் அறியாதவனேனும், சிறந்த அறிவியல் வாய்ந்தவனாதலின் தனது கொடிய செயல்களையும் கருத்துக்களையும் பிறரறியாவண்ணம் காத்துக்கொள்வதில் வல்லவன். அவ்வப்போது அவன் தனது சபைகூட்டும்போது, தனது எண்ணங்களைத் தான் நேர்முகமாக வெளியிடாமல், சகுனி கன்னன் முதலானோரைப் பயிறச் செய்து, தனக்கு யோசனைகூறும் பொறுப்பைப் பிறர்மேல் சார்த்தும் சாமர்த்தியமும் தந்திரமும் கரவும் உண்டு. உதாரணமாக, கண்ணன் தூது சென்ற அன்றிரவு, சுயோதனன் இரகசியமாக மந்திரமிருந்தபோது, தனது கொடிய எண்ணத்தை, “யாதவன் தனித்து வந்தான் என்செய்வது இயம்பும்” என்று வெகு நுட்பமானதோர் குறிப்பில் பெறவைத்தானன்றி வேறொன்றும் வெட்டவெளிச்சமாகக் கூறினானல்லன். உடனே திருதராட்டிரன் ‘இரும்புலி வலையிற்பட்டால் விடுவரோ எயினரானோர்’ என்று பின்னும் விரித்துக் கூறினான். பிறகு, ஒவ்வொருவரும் தமதமதிஷ்டப்படியே ஒவ்வொன்று கூறியதும், துச்சாதனன்,

விதுரனும்அவனுஞ்சேரவெந்திடமலைவதல்லால்
மதிபிறிதில்லை யின்னே வல்விரைந் தெழுமின்

என்று கூறிச் சுற்று முற்றும் பாய எத்தனிக்கும் விலங்கையே யொக்கின்றான். இவ்வாறு இவனது ஒளிமறைவற்ற குரூரத்தையும், அறிவின்மையையும் கண்டால்இவனை ஒரு மிருகமென்றே கூறவேண்டும். ஆதலின் வீமன் அவனை வேட்டையாடியபோது எல்லோரும் அவ்வேட்டையைக் கண்டு வேடிக்கை பார்த்து நின்றனரேயன்றி ஒருவரேனும் மனிதன் வதைபடுகிறானே யென்று அவனுக்காக இரக்கம் பாராட்டினர் அல்லர். துரியோதனன் ஒரு சிறு புலம்புறு சொல்லேனும் பயின்றானல்லன். கன்னன்மாத்திரம் ‘வேந்தனது தம்பி மாண்டனனே’ என்று அச்சுயோதனன்பொருட்டுச் சிறிது மனந்தளர்ந்தானல்லது, சுயோதனனது தம்பியராவது,மற்றும் அப்பரந்த சேனையில் ஒருவராவது அவனிடத்தே பரிவுகூர்ந்தனர் அல்லர். இவ்வாறு மன்னர்க்கிளையோனை வாட்டருமனுக்கிளையோன் இழுத்தபோது, அப்பெரிய சேனை சமுத்திரம் வீமன் துச்சாதனனது கை விரல்களைத் துணிக்கும் அக்காட்சியை மிருகவேட்டை யாடுவதைக்கண்டு வேடிக்கை பார்ப்பது போல், சிறிதளவும் கண்ணீர் மல்காமல் பார்த்து நின்றனர். ஆனால் இத்தனை மக்களும் சிறிதேனும் இரக்கமில்லாமல் பார்த்தனரெனினும், அறக்கடவுளான அத்தருமனும் அருள் பெருகாதுநின்றொழிவானெனினும்,துச்சாதனனென்னும் விலங்கல்லா விலங்கிற்கும் எட்டாதொழிவதோ அவ் வெம்பெருமானது இரக்கம்? புன்மையிலும் புன்மையதாய், கேவலத்தினும் கேவலமாய் நின்றதோர் பொருளினும் அவனது அருள் கிளராதொழியின், அவனது தயைதான் என்ன புகழுடைத்து? ஆதலின் தாயிற் பெரிதும் தயாவுடைய எம்பெருமான் பண்டோர் நாளில் யமுனைத் துறையில், நீர் அருந்த அறியாத பச்சிளங் கன்றுகளுக்குக் கையில் நீரேந்தி யுண்டுகாட்டிய அக் கருணை வள்ளல், அத் துச்சாதனனென்னும் கொடிய விலங்கிற்கும் இரக்கம்பாராட்டுவதல்லாமல்,வனாந்தரம் போல் வற்றிய அம்மானிடர் நெஞ்சிலும் ஈரம்தெளித்துஉய்யக்கொள்வான்,

தண்ணீர் நிகரெனத் துச்சாதனன்தன் மெய்யிலிழி
புண்ணீர் பருகப் புகுவோனை யாவருக்கும்
கண்ணீர் வரத் தடுத்தான்........

தடுத்த அக் கமலக்கை அம்மக்கள் கண்களூடே சென்று அவர்களது உள்ளத்தின் இரக்க நரம்புகளைத் தடவிப் பறிமாற, அவர்தம் மெய் யென்னும் சட்டியிலே அன்பென்னும் அமுதமும் கிளர்ந்து, வற்றல்மரம் தளிர்த்ததுபோல் அவர்களது இதயங்களும் தளிர்த்தன.

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்
இனியிந்த உலகுக் கெல்லாம்
உய்வண்ண மன்றி மற்றோர்
துயர்வண்ணம் உறுவ துண்டோ

என்னும் அவ்வாழ்த்தொலியை யன்றோ நாம் சப்திப்போம். ஆனால், இத்துணை எளிதில் தனது கருணையொளியைக் காட்டிய இச்சௌலப்யம் இருந்தபடியென்? வாலியை அன்று பகழியே தருமமாக ஏவி உய்யக்கொண்டவாறும், இராவணன் திருமெய்யில் வாளி தோய்த்து ஞானம் பிறப்பித்தவாறும், தாடகையைக் கொன்று, அகலியை உய்வித்துத் தன் கைவண்ணங் கால்வண்ணங்களைக் காட்டியதுமாகிய பெருமைகளை ஒப்பதே இச்செயலும்.ஆயினும்,இராமாவதாரத்தில் பெறப்பட்ட அக்கடுமையும், கிருஷ்ணாவதாரத்தில் பெறப்பட்ட இச்சௌலப்யமும் இருந்த முறைதான் என்? அதனாலேயன்றோ செவ்விய மதுரஞ்சேர்த்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய அமுத கவிஞர்களான ஆழ்வார்களும்,

என்னைநீ புகலக் கேண்மோ
எங்குமா யாவு மாகி
மன்னிய பொருளும் யானே
மறைக்கெலாம் முடிவும் யானே

என்று அருச்சுனனறிந்திட உரைத்தருளிய கீதாசாரியனது சௌலப்யத்தை மனமுவந்து பாடினரேயன்றி, கருடன் அன்று நாகபாசம் களைவித்து, எம்பெருமானைப் போற்றிய போதும், அவனை அறிந்து கொள்ளாததுபோல் “ஐயநீ யாரை எங்கள் அருந்தவப் பயனாய் வந்தாய்” என்று கழறிய அதிநேக மாயையை அவனுக்கே விட்டருளி‘உண்ணும்சோறு பருகு நீர், தின்னும் வெற்றிலை யெல்லாம்’ என்று நினைத்துக் கிருஷ்ணாவதாரத்திலேயே மண்டிநின்றனர்.

---

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

### 7-ம் பத்து, 7-ம் தசகம்

[299-வது பக்கத் தொடர்ச்சி]

### 6-ம் பாசுரம்

உய்விடமேழையர்க்குமசுரர்க்குமரக்கர்கட்கு
மெவ்விடமென்றிலங்கிமகரந்தழைக்குந்தளிர்கொல்
பைவிடப்பாம்பணையான்றிருக்குண்டலக்காதுகளே
கைவிடலொன்றமின்றியடுகின்றனகாண்மின்களே.

அவதாரிகையும் உரையும்:—இப்பாசுரத்தில் தன்னைப்போலே பகவானிடத்தில் ஆசைப்படுகிற ஏழையர்களுக்கு (தன்னைப்போலவே, அவ்வாசை பூர்த்திபெற அதிர்ஷ்டமில்லாதவர்களுக்கு) உய்விடம் எவ்விடம்? அதாவது உய்யும் இடம் ஓரிடமும் இல்லையென்றும், மகரகுண்டலங்கள் அணிந்த கண்ணபிரானினுடைய திருக்காதுகள் (கைவிடலின்றி) ஒருக்ஷணங்கூட ஓயாமல்கண்கள்முன்நின்று நலிவுசெய்கின்றன. அவைகள் செய்கின்ற நலிவிலிருந்து தப்பிப்பிழைக்க மார்க்கமில்லையென்று சொல்வது இப்பாசுரத்தின் கருத்து. அதாவது திருக்காதுகளின் அழகை எப்போதும் கண்டுஅநுபவிக்கவேணும். அதற்கோ இட

மில்லையே என்ற துக்கம். மகர ஆகாரங்களாய் அழகாய் இளந்தளிர்கள் வளர்ந்திருக்கின்றதுபோல்காண்கின்றன காதுகள்.

குறிப்பு:—எனக்கு உய்ய வேறு இடமில்லை அன்னைமாரே! காண்மின்களே - நீங்கள் ஆராய்ந்து பாருங்கோள்! என்று சொல்லுகிறபடி. இத்துடன் நிற்காமல் இம்மஹானை ஆழ்வார் பகவானின் திருக்காதுகள் தன்னை நலிவுசெய்கிறதுபோல் அசுரர்களையும் அரக்கர்களையும் பீடைசெய்கின்றன என்று அவர்களையும் தன்கூட்டில் சேர்த்துப் பிரஸ்தாபிப்பதில்திருவுள்ளமென்னவென்று கவனிக்கவேண்டி நேரிடுகிறது. அவர்களும்மேற் கண்ட அவயவசோபையாலும் அழகாலும் நலிவுபடுகின்றார்களென்பது ஸ்பஷ்டம்- ஆசையாலா? என்று அடுத்த கேள்வி உதிக்கிறது. இல்லை; பொறாமையால் இறந்துபடுகிறார்களென்று ஆழ்வாரின் திருவுள்ளமா? இப்படியும் இருக்கலாமென்று "நீதிவழுவா நெறிமுறையில் பயின்று தேர்ச்சிபெற்ற இருபத்துநாலாயிரப்படி உரைகாரர் ஊஹித்து உரைவகுத்திருக்கிறார். ஆறாயிரப்படிஉரைகாரர் எழுதியுள்ள பொழிப்புரையைமுதலில் இங்கு குறித்துப் பிறகு மேல்படிஊஹத்தைப்பற்றி விமர்சிப்போம்; "அபலைகளுக்கும்-அதாவது காமவேட்கையைத் தாங்க மனோபலமில்லாத பெண்டீர்களுக்கும் - அசுரர்களுக்கும் ராக்ஷஸர்க்கும் உய்விடம் எவ்விடம்? அதாவது ஓரிடமுமில்லையே! என்றிலங்கித் திருமகரக் குண்டலம் தளிர்கின்ற தளிரோ? தன்னுடைய திவ்வியதேஹஸ்பர்சத்தாலேமலர்ந்த படங்களையும் பிரதிகூலருக்கு அணுகவொண்ணாவண்ணம் நஞ்சையுமுடையவனாய்த் தன்னுடைய வழகை யதிகரிக்குமவனான ஆதிசேஷனை யணையாகவுடைய வெம்பெருமானுடைய திருக்குண்டலக் காதுகளே எப்போழ்தும் நலிவுசெய்கின்றன, நீங்களும் என்நலிவை காணக்கூடுமே.

விசேஷக் குறிப்பு:—இங்கு ஆழ்வார் திருவுள்ளம் பகவத்கீதை 11-வது அத்தியாயத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் எடுத்த விசுவரூபத்தை ஸேவைசெய்த பின்னர் அதையே அவலம்பித்து அந்த அத்தியாயம் 45 வது சுலோகத்தில் அர்ச்சுனன் அந்த விசுவரூபத்தை விட்டுப் பழையபடி தமது பூர்வஸௌமிய ரூபத்தைத் தரிசிக்கும்படிஸேவை காட்டவேண்டுமென்ற வேண்டுகோளில் தாழ்ந்ததாகக் கொள்ளவேண்டும். அதில் அர்ச்சுனன் "இதுவரையில் காணப்படாதிருந்த விசுவரூபத்தைப்பார்த்து(1)'ஹ'ரிஷதஃஅஸ்மி- சந்தோஷித்தவனாக ஆகிறேன்;(2)"பயனேசமேமனஃ ப்ரவ்யதிதஃ - பயத்தினாலேயும் என்னுடைய மனதானது நடுங்கி யிருக்கின்றது, என்றான். பிறகு 49-வது சுலோகத்தில் பகவான், "ஈதிர்க்கு கோரம் மம இதம் ரூபம் திருஷ்ட்வா தேவியதா மா - இப்படிப்பட்ட என்னுடைய பயங்கரமான இந்தச் சுவரூபத்தைப்பார்த்துஉனக்குப்பயம்வேண்டியதில்லை; என்று வற்புறுத்தி ஸமாதானம் செய்தார். இவ்வண்ணம் பரம ஸிநேஹிதனான அர்ச்சுனனுக்கே பகவானின்கீழ் 15 முதல் பலசுலோகங்களில் விவரித்திருக்கிறவிசுவரூபம் மனத்திட்பத்தைக் கலக்குமானால் உலகநாசத்தையே கோரும் ராக்ஷஸர்களுக்கு இவ்வாச்சரியமான ரூபம் "ராக்ஷாம்ஸி பீதானி திசோ திருவந்தி - ராக்ஷஸர்கள் பயந்தவர்களாய் 10 திக்குகளையும் நோக்கி ஓடுகிறார்கள் என்று ஷேயார் கண்ட காட்சி ஆழ்வார் திருவுள்ளத்தில் அகப்பட்டிருக்குமென்பதைக் குறிப்பிட அவசியமில்லை. ஷை 38-வது சுலோகத்தில் அர்ச்சுனன் விவரித்திருக்கிறபடி "அஸ்விய விசுவஸ்விய பரம்நிதானம், வேத்தா வேத்தியம் பரஞ்சதாமம் துவமஸி விசுவம் துவயா ததம்-"இந்தப் பிரபஞ்சத்திற்குப் பிரளயகாலத்திலடைகிற சிரேஷ்ட ஸ்தானமும், அறிகிறவனும் அறியத்தக்க வஸ்துவும் உத்தமமான விஷ்ணு ஸ்தானமும் நீராகவே யிருக்கிறீர்; சகல பிரபஞ்சமும் உம்மாலே வியாபிக்கப்பட்டிருக்கிறது." முதலியத் தத்துவங்கள் ஆழ்வார் திருவுள்ளத்திலும் படிந்திருக்குமென்பது ஸ்பஷ்டம். அவ்விசுவரூப அர்ச்சுனன் பாரதஸேனைகளும் பீஷ்மர் துரோணர் முதலான பெரியோர்களும் ஏற்கனவே பகவானின் ஆணையால் மறித்துப்போக நியமிக்கப்பட்டிருக்கிறார்களென்று கர்ணன் உள்பட இருகட்சி வீரர்களும் விசுவரூபவாய்களைநோக்கிப் பிரவேசித்து மரிப்பதைக் கண்டு தான் பாரதயுத்தத்தில் கலந்து போர் புரிவது ஓர் வியாஜமே என்று மனம் தெளியவேற்படுத்தப்பட்டதென்று உணர்ந்தான். இதனை 26-27 சுலோகங்களில்காண்க. அர்ச்சுனனைப் போலன்றிக்கே எல்லாம் பகவானின் ஆணை என்று அறிந்து தேர்ந்த ஆழ்வாருக்கு இவ்வுண்மை கற்கவேண்டியதில்லை. தற்காலம் இவர் இன்னாதாகிற இழவும் ஸந்நிதானத்தில் பகவான் அவரை அமைத்து எல்லாக் காலத்திலும் திவ்விய ஸௌந்தரியத்தை அநுபவிக்கச்செய்ய அவனின் கிருபை உதவாததைப்பற்றியல்லவோ? இம்மஹானுக்கும் தற்காலம் பகவானின் திவ்விய அவயவசோபைகள் அசுரர்களையும் தீமை மிக்க திருவற்ற தீயார்களான ராக்ஷஸர்களையும் நலிவதுபோல் தம்மையும் வருத்துவது நியாயமாவென்று ஆழ்வார் முறையிடுவதாகக் கொள்வதுஉசிதமாயும்சந்தர்ப்பத்துக்கு வெகுஇணக்கமாயும் பொருத்தமாயுமிருக்கும். அர்ச்சுனன் காணலுற்றவிசுவரூபத்தில் பகவானின் கோரஸேவை பயஹேது. க்ஷீராப்தியில் அரவணைப் பள்ளியில் அமர்ந்திருக்கும்சுவரூபம்வெகு ஸௌமியமல்லவோ? அசுர இராக்ஷசர்களுக்கு என்ன பயஹேதுவென்ற கேள்விக்குப் பதில்உரைப்பவர்போல் ஆழ்வார் "பைவிடப் பாம்பணையான்" என்று பாடியிருக்கிறார். பகவானோடு ஒன்றுகூடியிருக்கும் சோதியால் மலர்ந்த "பை" சிரஸுகலாபங்கள் விஷங்களையும் நிறைத்து வைத்துக்கொண்டு ஜ்வலித்தலால் தீய மனமுள்ளவர்கள் அணுகவொண்ணுமோ வென்று சாற்றுகிறபடி.

குறிப்பு:—"இலங்கி" - மகர குண்டலங்கள் பிறர்க்குத் துயர்பாடு விளைவித்தாலும் அதைக் கவனியாது மினுமினுப்பாய்த் தளிர்விட்டு ஜ்வலிக்கின்றதே; இது வென்ன கேடிலும் கேடு! என்று பரிதபிக்கிறபடி.

---

### 7-ம் பாசுரம்

காண்மின்களன்னையர்காளென்று
காட்டும் வகையறியேன்
நாள்மன்னு வெண்திங்கள்கொல்
நயந்தார்க்கு நச்சிலைகொல்
சேண்மன்னு நால்தடந்தோள்
பெருமான்தன் திருநுதலே
கோள்மன்னி ஆவியடும் கொடியே
னுயிர்கோ ளிழைத்தே.



பதக்குறிப்புக்கள்:—நாள்மன்னு - நாளுக்கு நாள் அதிகரிக்கும், வெண்திங்கள் கொல் - சுக்கில பக்ஷச் சந்திரனோ? நயந்தார்க்கு - என்னைப்போல் அதை- யே யநுபவிக்க ஆசைப்படும் பெண்களுக்கு, நச்சு - ஆசை - இங்கு ஆசைப்படுவதில் பிரயோஜனம், இலை கொல் - இல்லையென்று தீர்த்தபடியோ! சேண்மன்னு - வெகுதூரம் வியாபிக்கத்தக்க (அதாவது, நீண்டு திரண்ட) நால் - நான்கு தடந்தோள் - விசாலமாய்த் திரண்டுஉருவாகவிருக்கிற தோள்களுடையஎம்பெருமானுடைய, நுதலே-அர்த்தசந்திரவடிவமான களங்கமற்றநெற்றிப்பிரதேசமோ? அது எதுவென்றுநிச்சயிப்பேன்! கொடியேன் உயிர்-என் நாயகனான பகவானை, இயற்றியுள்ள பற்பல கொடிய பாபங்களால் யநுபவிக்கப்பெறாதயான், உயிர்-உயிரை, கோள்-குறிவைத்து, இழைத்த - ஏற்பாடு செய்துகொண்டிருக்கிற, கோள்மன்னி - உறுதிப்பாடு செய்ததை முடிக்கும் சக்தி நிறைந்ததாய், ஆவியடும் - ஆவியை ஒழிக்கின்றது. காண்மின்கள் அன்னையர்காள் - தாய்மார்களே, பாருங்கோள்! என்று நீங்கள் நான் சொல்லும் சொற்கள் உறுதிப்படும்படி காட்ட அவனின் திவ்வியஸௌந்திரியம் எனக்கு விசதமாய்த்தெரிவது போல உங்களுக்குத்தெரியவில்லையே. மேலும் காட்டும் வகையோ அவன் திவ்விய உருவம் என் கைக்குச் சமீபத்திருந்தும் அகப்படவில்லை. ஆகையால் காட்டுவேன் பாருங்கோள் என்று சொல்லவும் நிலமில்லை.

---

# நரவாகன தத்த சரிதம்

[294-வது பக்கத் தொடர்ச்சி]

## VII. பிரியதர்சன லாபம்

கோமுகன் வழிப்பாதைத்துன்பம்நீங்கப் பலகதைகளைச் சொல்லியும் விளையாட்டைச் செய்தும் வந்தான். இவர்கள் காசியைக் கிட்டினார்கள். திருடருக்கு அஞ்சி நரவாகனன் அணிந்திருந்த ஆடையாபரணங்களைக் களைந்து கொடுக்கும்படி கோமுகன் வேண்டிக்கொண்டான். நரவாகனனை அங்கிருந்த சத்திரத்தில் தங்கியிருக்கும்படியாயும் தான் பட்டணம் போய் வருவதாயும் கூறிக் கோமுகன் சென்றான்.

அந்தச் சத்திரத்தில் ஒரு சந்நியாசியும் ஒரு பிரமசாரியும் வந்தனர். முதல்வன் பாஷண்டி. பின்னவன் திருடன். இவர்கள் விதி பெரிதா மதி பெரிதா என்று வாக்குவாதஞ் செய்துகொண்டிருந்தனர். வாக்குவாதத்தின் நடுவில் திருடன் நரவாகனனைச் சுட்டிக்காட்டி இவனுடைய அங்க அடையாளங்கள் இவனொரு சக்கரவர்த்தியாக இருக்கவேண்டுமென்று காட்டுகிறது. இருந்தாலும் இவன் போக்கிரியாக ஆடையின்றிக் கந்தையோடுகாணப்படுகிறான் என்றான். அதனையும் நரவாகனன் கேட்டுக்கொண்டிருந்தான்.

பட்டணத்திற்குள் சென்ற கோமுகன் அந்தப் பட்டணத்து அரசனுடைய அரண்மனை வாசலுக்குச் சென்று காத்திருந்தான். அரண்மனையிலிருந்து ஒரு பெரியமனிதன் வந்தான். கோமுகன் அவனிடம் சென்று தான் அவந்தியிலிருந்து கல்வியின் பொருட்டுத் தன் தமயனோடு இந்தப் பட்டணத்திற்கு வந்திருப்பதாகக் கூறினான். அந்தப் பெரிய மனிதன் தனக்குப் புனர்வசு என்ற பேரென்றும் தான் ஒரு பெரிய வியாபாரி என்றும் தனது வீட்டில் கோமுகனும் அவனது தமையனும் தங்கியிருக்கலாமென்றும் முகமன்கூறி அவனைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றான். கோமுகன் அந்த வீட்டில் தங்கினபோது எதிரில் பெரிய ஆரவாரம் கேட்டது. இவன் அங்குச்சென்று ஆரவாரத்திற்குக் காரணத்தைவிசாரிக்கையில் அங்குச்சூதாடுவது வழக்கமென்றும் அதற்குரிய பணையமெல்லாம் புனர்வசு கொடுப்பதென்றும், வெல்லும்போது கனத்த ஆரவாரமும் தோற்கும்போது மிகுந்த துக்கக் கொண்டாட்டமும் சூதாடுமிடத்தைச் சூழ்ந்திருப்போரால் செய்யப்படுகிறதென்றும் அறிந்தான். இவனும் நரவாகனனுடைய நகைகளை ஈடாகவைத்து ஒரு ஆட்டம் ஆடினான். அதனில் இலட்சம்வராகன் கெலித்தான். இதனை அறிந்த புனர்வசு கோமுகனை அதிகமாக உபசரித்து உண்ணச் செய்தான். உண்டபின் இருவருஞ் சென்று நரவாகனனை அழைத்துவந்தனர்.

நரவாகனன் புனர்வசுவின் செலவில் வசிக்க இஷ்டப்படவில்லை. அதனை அறிந்த கோமுகன் தங்களுக்கென பரிசாரகர்களையும் விடுதியையும் திட்டஞ் செய்து கொடுக்கும்படி புனர்வசுவை வேண்டிக் கொண்டான். அவனும் இருவரைத் தெரிந்து வேலையில் அமர்த்தினான். வந்த இருவரும் நரவாகனனைக் கண்டதும் சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டனர். அன்று சமையல் நடந்தது. அதனையுண்ட நரவாகனன் அவர்களது சமையலை மெச்சினான். அவர்களை அழைத்துத் தலைக்குப் பதினாயிரம் பொன் பரிசளிக்கும்படி கோமுகனுக்குக் கட்டளையிட்டான். ஆயினும் சமையற்காரருள் மூத்தவன் தன்னுடைய எஜமானனிடம் இச்சமயம் பணமின்மையால், சன்மானம் பெறுவது தகுதியல்ல வென்றான். இளையவனோ எஜமானன் சக்கரவர்த்தியல்லவோ வென்று கூறிச் சன்மானத்தைப்பெற்றுக்கொண்டான். இவைகளைக் கேட்ட கோமுகன் விஷயத்தை விளக்கமாகச் சொல்லும்படி அவர்களைக்கேட்டபோது, அவர்கள் தாங்கள் காசிராஜனான பிரமதத்தனது சமையற்காரனதுபுதல்வர்களென்றும் நந்தோப நந்தரென்று பேரென்றும் தாங்கள் மக்களது அங்க அடையாளங்களைக்கண்டு பின்வருங் காரியங்களைச் சொல்லக்கூடியவர்கள் என்றும், நரவாகனனைக் கண்டதும் அவன் வித்தியாதரச் சக்கரவர்த்தியாதற்குரிய அடையாளங்கள் அவனது உடலில் காணப்பட்டமையாற்றான் தாங்கள் தெண்டனிட்டு வணங்கியதென்றும் கூறினார்கள்.

அரசகுமாரர்கள் காசியில் சுகமாகக் காலங்கழித்துக்கொண்டுவருகையில் ஒருநாள் தெருவில் ரிஷிதத்தை என்ற சமணி (சமணப் பெண் துறவி) சென்றனள். அவள் அரசனுக்கு மிக்க நட்புடையவள். புனர்வசு தனது விருந்தினர்க்கு அவளை அறிமுகஞ் செய்ய முயன்றான். அவள் இடங்கொடுக்கவில்லை. இதனைக்கண்ட கோமுகன் அவளைப் பின்தொடர்ந்து ஜைனப் பள்ளிக்குச் சென்றான். அவன் எல்லாத் துறைகளிலும் கைதேர்ந்தவனாகையால் அங்கு ஜீன அருகன்மேல் மிகஉருக்கமாகஒருபாட்டுப்பாடினான்.

அந்தப் பாட்டில் கட்டுண்ட சிடகோடிகள் புதியவர் பொருட்டு இசைப்பாட்டுக் கோஷ்டி நடத்த வேண்டுமென்றர். அதன் பொருட்டு நகரிலே இசையில் வல்லவர்களான கங்காஷிதனும் பிரியதர்சனையும் வரவழைக்கப்பட்டனர். பிரியதர்சனையைக்கண்டதும் ஒரு இளமாதைக் கண்டதுபோல நரவாகனன் வணங்கினன். அதனுல் அவையோர் சிறிது வருத்தமடைந்தனராயினும் நரவாகனதத்தன் செய்த வீணைப்பிரயோகத்தினுல் சபையோர் மெய்மறந்தனர். பிரியதர்சனை நரவாகனனிடம் யாழ்பயில வேண்டுமெனக் கேட்டுக் கொண்டான். இந்தப் பிரியதரிசனை வணிகர் தலைவனுகையால் நரவாகனனிடம் யாழ் பயில்வதனுல் மிருந்தலாபம் உண்டென்று கோமுகன் எண்ணினன். அதனை நரவாகனனும் ஒத்துக்கொண்டான்.

கோமுகன் அடிக்கடி வெளியிற் சென்றுவந்தான். நரவாகனன் அவனைக் கேட்டபோது கௌசாம்பியைச் சார்ந்த தண்டத் தலைவனுன அரிசிகனது பணியாளன் ஒருவன் தெருவில் காணபட்டானென்றும் அவனைத் தேடித் திரிவதாகவும் சொன்னுன். உண்மையில் அவன் அவ்வாறு செய்யவில்லை. அவன் ரிஷிதத்தையைக் காதலித்தான். அதற்காகச் சைனத்துறவிகளுக்கும் சைனப்பள்ளிக்கும் பெருந் தொகை செலவிட்டான். இதனுலே சைனத்தலைவியாக இருக்கும் ரிஷிதத்தைக்கும் கோமுகனுக்கும் அதிக நட்பு உண்டாயிற்று. அவள் தான் இராசக்கிருகத்திலிருந்த மகாதின்னனுடைய மகளென்றும் கோமுகன் தனது அத்தை மகன் என்றும் தன்னை அவனுக்கு மணந்துகொடுப்பதாகப் பெரியோர் நிச்சயம் செய்திருந்தனர் என்றும் அவன் காட்டில் செல்லும்போது புளிந்தகரால் கொலையுண்டனனென்றும் சொல்லி வருத்தப்பட்டாள். கோமுகன் அப்பொழுதும் தன்னை இன்னுனென்று காட்டிக்கொள்ளாமல் பார்ப்பனச் சிறுவனுகவே நடித்துவந்தான். இவள் எவ்வாறு சைனத்துறவியாயினள் என்று கேட்டபோது தான் சிறுமியா யிருக்கும்போது தனக்கு விடாத வெப்புநோய் கண்டது என்றும் அந்த நோயைத் தீர்க்க ஒருவராலும் ஆகாமற்போகவே அதனைச் சுருததரை என்ற சைனத்துறவி நீக்கினுள் என்றும், அன்றுமுதல் அவளோடு வாழ்ந்துவந்ததால் சைன மார்க்கத்தைச்சேர்ந்து தவக்கோலம் கொண்டதாகவுஞ் சொன்னுள். நாளுக்குநாள் இவர்களுள் அன்பு முற்றவே கோமுகனும் தன்னை இன்னுனென்றுகூறினுன். ஷிதத்தையும் தனது துவராடையைக் களைந்து மணப்பெண்ணுகி, கோமுகனை மணந்துகொண்டாள்.

இவ்வாறு இவர்கள் வாழ்ந்துவருங் காலத்தில் நரவாகனன் பிரியதர்சனை பெண்ணென்றும் அவளை மணந்துகொள்ள ஏற்பாடுசெய்ய வேண்டுமென்றும் கோமுகனை வற்புறுத்தினுன். கோமுகனே ஊரார் பிரியதரிசனையை ஆணென்று நினைத்திருக்கின்றனர் என்றும் ஊருக்குக் கட்டுப்பட வேண்டுமென்றும் பலவிதத்திலும் எடுத்துக் கூறினுன். மேலும் அவன் முன்னம் சத்தியகஞ்சிகன் என்று ஒரு பார்ப்பனன் இருந்தானென்றும் அவன் கங்கையிலே கல்லொன்று மிதந்து அக்கரை செல்லக் கண்டான் என்றும் அந்தச் செய்தியை தன் மாணவர்களுக்குச் சொல்ல அவர்கள் ஊரில் அதனைப் பரப்பினர் என்றும் கூறினுன். ஆனுல் அதனை ஊரார் நம்பவில்லை. அந்தச் செய்தி அரசன் காதுக்குஎட்டியபோது அவன் சத்திய கஞ்சிகனை வரவழைத்துக் கேட்டான். அவன் தான் ஒன்றும் அறியாதவன் என்று கூறிவிட்டான். ஆகையால் ஊரில் நம்பும்படியான செய்தியைக் கூற வேண்டுமென்றும், இல்லாவிட்டால் ஊரார் நம்ப மாட்டார்கள் என்றும் எவ்வளவு கூறியும் நரவாகனன் கேட்கவில்லை. தன்னுடைய எஜமானனைத் திருப்தி செய்விக்கக் கோமுகன் பிரியதரிசனையை விருந்துக் கழைத்தான். இருவரும் விருந்துண்டு சுகமாகக் காலங் கழித்தனர். அந்தச் செய்தி ஊரில் பரவவே பலர் பலமாதிரி பேச ஆரம்பித்தனர்.

மறுநாள் காசியரசனுன பிரமதத்தன் நரவாகனனை அழைப்பதாக ஆள் வந்தான். நரவாகனன் ராஜசபைக்குப் போனபோது பிரியதரிசனையின் தகப்பனுன காவேயன் மறுபிறப்புப்பிறந்து வந்திருப்பதாகவும் அவன் தன்னுடைய நற்கருமத்தால் புண்ணியலோகத்தை அடைந்தாலும் தன்னுடைய மனைவி செய்த அடாச் செய்கையால் தான் இப்பொழுது மறுசென்மம் எடுத்திருப்பதாகவும் கூறினுன். தன்னுடைய மனைவி செய்த அடாத செய்கை தனக்குப் பிறந்த பெண்ணை ஆண்பிள்ளை என்று ஊராரை ஏமாற்றி ஆண்பிள்ளையாகவே வளர்த்ததுதானென்றும் பிரியதரிசனை பெண்தானென்றும் அவையில் சொன்னுன். ஊரார் எல்லோரும் மகிழ்ச்சி அடைந்தனர். இவ்வாறு கூறியவன் ஒரு குறளன். ஒருவன் தெருவில் இந்தக் குறளனைத் தூக்கிச்சென்று கொண்டிருந்தான். அவன் இனி அந்தக் குறளனைக் கட்டிச் சுமக்கமுடியாதென்றும் அவனைக் கழுத்தை முறித்துக் கொன்றுவிடப் போவதாகவும் கூறினுன். அந்தக் குறளன் தன்னை அவ்வாறு செய்யவேண்டாம் என்றும் யாருக்காவது அடிமையாக விற்றுவிடும்படியும் வேண்டிக் கொண்டான். இதனைக் கேட்ட கோமுகன் இதுதான் நல்ல தருணமென்று அவனை வாங்கினுன். தனது மனைவியால் பிரியதரிசனையின் பூர்வோத்தரம் தெரிந்தவனுதலால் அந்தக் குறளனுக்குப் போதனைசெய்து காவியனுக நடிக்கச் செய்து காரியத்தைச் சாதித்தான். பின் நரவாகனன் பிரியதரிசனையை மணந்துகொண்டு சுகமாக வாழ்ந்தான்.

## VIII. பாகீரதியசோ லாபம்

காசியரசன் பிரமதத்தனது பெண்ணுன பாகீரதி யசஸ் என்பாள் ஒருநாள் பல அந்தணருக்குத் தானம் வழங்குவதாயும் அவற்றுள் சில நரவாகனனுக்கும் அனுப்பப்பட்டதாயும் தாதி ஒருத்தி பல சன்மானங்களைக் கொணர்ந்தாள். பின்னொரு நாள் பிரியதரிசனையைப் பாகீரதிகூப்பிடுவதாகத் தாதிஒருத்தி வந்தாள். அரண்மனைக்குச் சென்றபோது பாகீரதி பிரியதரிசனையை நரவாகனனைப் பற்றிப் பல கேள்விகள் கேட்டாள். பின்னர் அவளுக்குச் சன்மானங்களைச் செய்தாள். பின்னுமொரு நாள் செடிகட்குத் திருமணம் செய்யப் போவதாகவும் அதற்குப் பிரியதரிசனையை அழைக்கத் தானே வருவதாகவும் சொல்லியனுப்பினுள். அன்று வந்தபோது நரவாகனனது கட்டழகைப் பாகீரதி கண்டாள். பின்னர் மணந்துகொண்டு காலங் கழித்துவந்தாள்$.

$. இதுவரையிற்றுன் நூல் கிடைத்துளது. எஞ்சிய பகுதி கிடைக்கவில்லை.



## நாமகள் தசாங்கம்

நாடு

செந்தார்ப் பசுங்கிளியே தென்பாற் குறுமுனியீ
நந்தாத் தமிழரசி நாடுரையாய்—வந்தேறி
மங்குறவழ் வேங்கடமும் வான்குமரி யாறுமிடைத்
தங்குதமிழ் நன்னுடு தான்.

மலை

அம்பொற் பசுங்கிளியேயன் றிளங்கோவாய்ந்தளித்த
செம்பொற் சிலம்பி சிலம்புரையாய்—உம்பரெலாம்
வந்துலவு மிந்துலவு வண்டுலவு தண்டலைசூழ்
வந்துலவு தென்பொதிய மாம்.

யாறு

அம்பா லனையமொழி யஞ்சுகமே செஞ்சொலருள்
ஐம்பா லழகிதமி ழாறுரையாய்—நம்பாதார்
ஈட்டிச் செழுங்கழுவி லேறவெதி ரேறிவரும்
ஏட்டிற் சுமந்தவைகை யாறு.

ஊர்

தாமப் பசுங்கிளியே சங்கத் தலையிருத்தி
ஊமைக் குறைதெரித்தா ளூருரையாய்—தூமமலி
மேன்மாடத் தும்பர் விதுப்பழித்த நெற்றியர்வாழ்
நான்மாடக் கூட நகர்.

முரசு

வண்டாடுஞ் சோலை மரகதமே வானவருங்
கொண்டாடுஞ் செல்விபறை கூறிடுவாய்—பண்டே
வழுத்து மியலிசை நாடகமு மாகும்
பழுத்ததமிழ் மூன்றும் பறை.

கொடி

முன்னம் பசுங்கிளியே மூட்டுமறைப் பூட்டவிழ்த்த
பொன்னங் கொடிக்குக் கொடிபுகலாய்-பின்னமிலா
வன்னக் கொடியிடத்தான் வேதண்ட மட்டுமுயர்
அன்னக் கொடியென் றறி.

மாலை

தண்டலையில் வாழுமிளந் தத்தாய் தமிழரசி
கொண்டணிய மாலையொன்று கூறிடுவாய்—தொண்
மாமாலை நீக்கி மணிமாலை யீந்தருளும் [டருள
பாமாலை யென்றே பகர்.

யானை

தேனேறு செஞ்சொற் சிறுகிளியே செய்யதமிழ்
மானேறு பட்டத்து வாரணமென்—ஞானக்
கலைபடு கடாக்களிறுங் கௌசிகனு நீந்த
மலைபடு கடாக்களிறும் மற்று.

குதிரை

சோலைப் பசுங்கிளியே சொல்லின் கிழத்திதிரு
மாலைப் பரிமா வகுத்துரை—மேலை
வரிபாடு மன்பர் வகையாய் வகுத்த
பாரிபாட லாடற் பரி.

செங்கோல்

வானகம்போல் நாசி மரகதமே வாய்த்தமொழி
தேனகம்போற் றித்திப்பாள் செங்கோலென்-மான
பல்காப் பியரும் பணிந்துதலை மேற்சூடுந் [முடன்
தொல்காப் பியமெனவே சொல்.

முற்றும்.


# கலா நிலயம்

முன்னைய வால்யூம்கள் இன்னும் சிலவே இருக்கின்றன, உடனே பெற்றுக்கொள்வது நலம்.

**1928, 1930, 1931, 1932, 1933, 1934** வருடத்தியவை கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| பைண்ட் செய்யாதவை—ஒவ்வொரு வால்யூமின் விலை ரூ. | 7 | 8 | 0 |
| ஆப்லெதர் கில்ட் பைண்ட் ” | 9 | 0 | 0 |
| ஒரு வால்யூமை இரண்டு பாகமாகப் பிரித்துப் பைண்ட் செய்தது ” | 10 | 0 | 0 |

இந்தியாவிற்குள் இருப்பவர், இரயில்வே பார்சல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். பர்மா, ஸிலோன், மலேயா முதலிய இடங்களுக்குத் தபால் மூலமாகத் தான் அனுப்ப இயலும். இந்தியா பர்மா ஸிலோனில் உள்ள இடங்களுக்கு வால்யூம் ஒன்றிற்கு ரூ. 2-ம், மலேயா, தென்னுப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ. 3-ம், தபால் பார்ஸல் சார்ஜ் ஆகும்.

இந்தியாவில் உள்ளவர் வேண்டிய வால்யூமின் விலையை அனுப்பித் தம்மூருக்கு அடுத்திருக்கும் இரயில் ஸ்டேஷனைத் தெரிவிக்கவும். அல்லது தபால் பார்ஸலில் பெற்றுக்கொள்ள விரும்பினுல், அந்தக் கட்டணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

வெளி நாடுகளில் உள்ளவர் வேண்டிய வால்யூம்களின் விலையையும் தபால் கட்டணத்தையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயல்வதில்லை.

பல போலிகள் இருப்பதால் நம் பிக்கையடைய நேரில் எழுதுக.

ஜீர்ச்ப்
அஜீர்ண பித்த சமனம்

ரூ. ஒன்று அனுப்பி 12 பாக்கெட்கள் நஞ்சன்கூடு பல் பொடி வீட்டில் பெறுக.

நஞ்சன்கூடு பல்பொடி
சோல் ஏஜண்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதருஸ்.

199218

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

டெலிபோன் பத்திரிகை:—ஹங்கேரியில் டெலிபோன் பத்திரிகை ஒன்று தொடங்கியிருக்கிறார்கள். முக்கியமான செய்தி கிடைத்ததும், டெலிபோன் வழியாக அதனைச் சந்தாதாரர்களுக்கு அறிவித்து விடுகிறார்கள்.

*　　*　　*

இன்ஷியூர்:—அமெரிக்காவில் பெயர்பெற்ற நாடகப்பெண்ணான மிஸ் மே மார்வே என்பவள் தனது புன்னகையை 50,000 பவுனுக்கு இன்ஷியூர் செய்திருக்கிறாள். இதற்குமுன் பற்பல நாடகமாதர் தம் கால்களையும், கண்களையும் இன்ஷியூர் செய்திருக்கிறார்களாயினும், இதுவரை ஒருவரும் புன்னகையை இன்ஷியூர் செய்ததில்லை. அடுத்த பத்து வருஷத்துக்குள் நோய் அபாயம் எக்காரணத்திலாவது அவளுடைய புன்னகையின் அழகும், இனிமையும் குறைந்தால் இன்ஷிருரன்ஸ் கம்பெனி மேற்படி தொகையைக் கொடுத்துவிட வேண்டுமென்பது நிபந்தனையாம்.

*　　*　　*

பெண் ஆணானாள்:—பம்பாய்ப் பகுதியிலுள்ள ஜனகாட் சமஸ்தானத்தில் ஒரு சிறுமி திடீரென்று வாலிபனாய் மாறியிருக்கிறாள். இந்தப் பெண்ணுக்கு 12 வயதில், ஆறு வருஷத்திற்கு முன் கலியாணமாயிற்று. சமீபத்தில் அவள் ஆணாக மாறத்தொடங்கிப் பூரணமான ஆணாய்விட்டாள். இதனை அறிந்த அவள் புருஷன் அவளை அவள் பெற்றோர்கள் வீட்டிற்கு அனுப்பிவிட்டான். அவன் தகப்பனார் சமீபத்தில் இறந்துபோனார். அவருக்கு ஏராளமான ஆஸ்தியிருக்கிறது. அவருக்கு வேறு ஆண்பிள்ளை இல்லை. அந்தச் சொத்து பெண்ணாயிருந்த இந்த ஆணுக்குச் சேரலாமா என்பதுபற்றி அவள் உறவினர்கள் வக்கீல்களை யோசித்துக்கொண்டிருக்கிறார்களாம். வக்கீல்கள் மேலதிகாரிகளைக் கேட்டிருக்கிறார்களாம்.

**Indo-Commercial Bank, Ltd.,**

**Mayavaram.**

Capital, Reserves, etc.. as at 30th August 1935 : Rs. 10,62,245.

*BRANCHES* :—

*Madras Office* :—
**107, Armenian Street.**

*Bazaar Branch* :—
**260, China Bazaar Road.**

Madura, Karaikudi, Virudhunagar, Tuticorin, Kumbakonam, Tiruvarur, Erode, Vizianagaram, Pudukottah, Tinnevelly, Salem and Trichinopoly.

*SUB OFFICES*:—

Shiyali, Chidambaram, Conjeevaram and Tanjore.

*All kinds of Banking Business undertaken on terms which may be ascertained on application.*

**S. N. N. SANKARALINGA IYER,**
*Managing Director,*
**107, Armenian Street, Madras.**

பாம்புடன் ஒரு குழந்தையும் பிறந்ததாம்:—ஜான் சிங்காரத்திற்கு 19-வது மைலில் பாரைபொங்கூர் என்னும் கம்பத்தில் ஒரு ஜாவாப் பெண் பிரஸவித்தாள். அவளுக்குப் பெண்குழந்தை யொன்றும், பாம்பொன்றுமாக இரண்டும் சேர்ந்து பிறந்தனவாம். பெண் குழந்தை பூரண அழகுடன் விளங்குகிறது. அந்த ஜாவாப் பெண்ணின் கணவன் அந்தப் பாம்பை ஒரு தட்டில் வைத்துக் குளமொன்றில் கொண்டுபோய் விட்டுவிட்டான். அதிலிருந்து பெண் குழந்தை பலஹீனமடைந்ததுடன், பாம்பைப்பெற்ற தாய்க்கும் ஜுரம் வந்துவிட்டது.

ஆனால் அன்றிரவு 12-மணிக்கு மேல் குளத்தில் விடப்பட்ட பாம்பு வீட்டுக்குவந்துவிட்டது. பாம்பு வீடுவந்து சேர்ந்ததும் பெண் குழந்தை பால் குடிக்க ஆரம்பித்துவிட்டது. தாய்க்கும் உடம்பு சௌகரியமாய்ப் போய்விட்டது. அப் பாம்பால் எவருக்கும் இடையூறு இல்லையாம். வெறும் பச்சை முட்டையையே அது உணவாய்க் கொள்ளுகிறதாம். அது வெண்மை கலந்த நீல நிறமுள்ளதாய் இருப்பதுடன் குழந்தையையேபோல் சதா தன் தாயிடமே இருந்து கொண்டிருக்கிறதாம்.

*　　*　　*

கணவன் விற்பனை:—இப்பொழுது அமெரிக்கா நியூயார்க்கில் இருக்கிற மேரி யென்ற அயர்லாந்து தேசத்து மாது தனது கணவனை 300 பொன்னுக்கு விற்றுவிடுவதாக விளம்பரம் செய்திருக்கிறாள். அதற்குக் கணவனும் இணங்கியிருக்கிறார். மேரி அயர்லாந்தில் இருக்கிற தனது வயதுசென்ற தாயாரைப் பார்க்கப் போகவேண்டும், அதற்குக் கப்பற் செலவுக்குப் பணம் இல்லை, விற்றுப் பணம் பெறுவதற்குத் தனது புருஷனைத் தவிர வேறு பொருளும் இல்லை. இருவருக்கும் கலியாணமாகிப் பதினேழு வருஷமாய்விட்டது.

*　　*　　*

பல்லால் விபத்து:—சமீபத்தில் வார்சா நகரில் ஒரு தனவந்தர் வெளியில் போய்க்கொண்டிருந்தார். அந்நேரத்தில் வேலையில்லாமல் தெருவில் திரிந்துகொண்டு வந்த இருவர் சிகரட்டுக்கு அவரிடம் நெருப்புக் கேட்டார்கள். அவர் பிடித்துக்கொண்டிருந்த சிகரட்டை எடுத்தபோது அவர் இரு தங்கப் பற்கள் கட்டியிருக்கக்கண்ட மற்ற இருவரும், அவர்மீது பாய்ந்து அவரைக் கொன்றுவிட்டு இரு தங்கப் பற்களையும் எடுத்துக்கொண்டு மாயமாக மறைந்துவிட்டார்கள். போலீசார் இவர்களைத் தேடியும் அகப்படவில்லை. சுமார் 15 தினங்களுக்குப்பின் இவ்விருவரும் இரு தங்கப்பற்களைப் பல்கட்டும் ஒரு டாக்டரிடம் விற்கச் சென்றார்கள். டாக்டர் சந்தேகித்துப் போலீசாருக்கு அறிவித்தார். போலீசார் இருவரையும் கைது செய்திருக்கிறார்கள்.

**சிறந்த பலவிருத்தி ஔஷதம்**

சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.

**ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்**

மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.

**32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1**

இனும்! “காம சாஸ்திரம்” இனும்!!

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)